# பாரதியின் பெண் விடுதலைக் கருத்தாக்கம் மரபும் புதுமையும்

# Bharathi's Concept of Women Liberation: Legacy and novelty

முனைவர் ப. கல்பனா

Dr. B. Kalpana

FIRST EDITION

TAMIL AIVU KALANJIYAM
(India's First Google Scholor Indexed Publisher)
IOR PRESS
தமிழ் ஆய்வு களஞ்சியம்

9 788195 005994

# பாரதியின் பெண் விடுதலைக் கருத்தாக்கம் மரபும் புதுமையும்

# Bharathi's Concept of Women Liberation: Legacy and novelty

**முனைவர். ப. கல்பனா**

Dr. B. Kalpana

Dr. B. Kalpana
Associate Professor,
Department of Tamil,
Bharathi Women's College (A),
Chennai-600108, India

Title: Bharathi's Concept of Women Liberation: Legacy and novelty

Edition: 1

ISBN 978-81-950059-2-5 ISBN 978-81-950059-9-4 (eBook)
https://doi.org/10.34256/tak20201

© IOR PRESS. This book is an open access publication. **Open Access** This book is licensed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (http://creativecommons.org/licenses/by/4.0/), which permits use, sharing, adaptation, distribution and reproduction in any medium or format, as long as you give appropriate credit to the original author(s) and the source, provide a link to the Creative Commons license and indicate if changes were made.
The images or other third party material in this book are included in the book's Creative Commons license, unless indicated otherwise in a credit line to the material. If material is not included in the book's Creative Commons license and your intended use is not permitted by statutory regulation or exceeds the permitted use, you will need to obtain permission directly from the copyright holder.
The use of general descriptive names, registered names, trademarks, service marks, etc. in this publication does not imply, even in the absence of a specific statement, that such names are exempt from the relevant protective laws and regulations and therefore free for general use.
The publisher, the authors and the editors are safe to assume that the advice and information in this book are believed to be true and accurate at the date of publication. Neither the publisher nor the authors or the editors give a warranty, expressed or implied, with respect to the material contained herein or for any errors or omissions that may have been made. The publisher remains neutral with regard to jurisdictional claims in published maps and institutional affiliations.

This Tamil Aivu Kalanjiyam imprint is published by the registered company IOR PRESS.
The registered company address is: 5/11, Perumal Kovil Street, Naickenpalayam, Coimbatore-641020 Tamil Nadu, India.

# Synopsis

Subramania Bharathi is probably the greatest poet in the History of Tamil literature. Many books and articles have been written both in English and Tamil praising his works and criticizing him for the past hundred years. His works have been taken up for research, to analyze Nationalism, language, politics, literature, translation, philosophy, feminism and religion.

This book entitled “Bharathi’s concept of women liberation: Legacy and novelty” analyzes his feminist thoughts and the lives of women during his period.

The author of this book Dr. B. Kalpana carefully analyzes about Bharathi’s works, his period, tradition, his innovative and modern thoughts that paved the way to the future generation.

In this book, Dr. B. Kalpana points out, how Bharathi overcame tradition, and became a revolutionary poet of the twentieth century. Bharathi’s feminist ideology is carefully analyzed in this book from the historical perspective.

பாரதி ஒரு மகாகவி. கடந்த நூறு ஆண்டுகளில் பாரதியைப் பற்றி ஏராளமான நூல்கள் பல்வேறு கருத்துநிலைகளை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளன. தேசியம், மொழி, அரசியல், இலக்கியம், மொழிபெயர்ப்பு, தத்துவம், ஆன்மிகம், பெண்ணியம் என்று பல தளங்களில் பாரதியின் படைப்புகள் தொடர்ந்து ஆராயப்பட்டு வந்துள்ளன. ‘பாரதியின் பெண் விடுதலைக் கருத்தாக்கம் மரபும் புதுமையும்’ என்னும் இந்நூல், பாரதி இயற்றிய பெண்விடுதலைப் பாடல்களை, அவர் வாழ்ந்த காலகட்டத்தோடு பொருத்திப் பார்த்து ஆராய முற்பட்டுள்ளது. அவ்வகையில் பாரதியின் பெண் விடுதலைக் கருத்தாக்கம் அவர் வாழ்ந்த காலகட்டத்தின் விளைவாக இருந்ததா அல்லது, கடந்த காலத்தின் மரபுகளிலேயே தோய்ந்து இருந்ததா அல்லது எதிர்காலச் சமூகத்திற்கும் தேவையான ஆற்றல்மிகு சிந்தனைகளின் நிலைக்களனாக இருந்ததா என்னும் விவாதம் இந்நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாரதியின் பெண் விடுதலைக் கருத்தாக்கம், மரபின் செழுமைகளை உள்வாங்கிக்கொண்டு, மாறும் சமூகத்திற்கேற்ற புதுமைகளைப் பெண்ணினம் உட்செறித்துத் தழைக்கவேண்டும் என்னும் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை உள்ளடக்கியதாக இருந்தமை இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நூல் உருவாக
உறுதுணை புரிந்த
தோழமைகளுக்கு..

நன்றி

பகவதி பாண்டியன்
கோபிராஜ்
கீர்த்தனா
சரண்ராஜ்
பா.இரவிக்குமார்
சுந்தர் சிங்
சுரேஷ்

# பாரதி என்றொரு பிரம்மாண்டம்

பாரதியைப்பற்றி கடந்த நூறு வருடங்களில் ஏராளமான நூல்கள் வெளிவந்துவிட்டன. புதிதாக என்ன சொல்லிவிடப் போகிறோம் என்ற மலைப்புடன்தான் ஒவ்வொரு முறையும் பாரதியை அணுகவேண்டியுள்ளது. பாரதி மகாகவி. வேறெந்த நாட்டிலும் வேறெந்த நூற்றாண்டிலும் வேறெந்த மொழிக்கும் கிடைத்திராத ஒரு மகாகவி. பெண்கள் மீது இவ்வளவு கரிசனத்துடன் படைப்புகளை எழுதி, மொழிக்கு வளம் சேர்த்த ஒரு பெருங்கவிஞன் பாரதி மட்டும்தான். ‘செருப்புக்குத் தோல்வேண்டியே, இங்குக் கொல்வாரோ செல்வக் குழந்தைதன்னை’ என்று பெண்ணுரிமைவேண்டிப் பரிவுணர்வுடன் கவிதை படைத்தவன் பாரதி.

தமிழ் இலக்கியம் பயிலும் எவரும், மொழி மீது பற்று கொண்ட எவரும், பாரதியைத் தவிர்த்துவிட்டுத் தமிழைப் படித்துவிட்டதாக மார்தட்டிக்கொள்ள முடியாது என்றே கருதுகிறேன். இளங்குழந்தைப் பருவம் முதல் இன்று வரை ஏதோவோர் வகையில், பாரதியை வெவ்வேறு மனநிலைகளில் வாசித்தவண்ணம் இருக்கிறேன். பெருங்கடலை சிறுகைக்குள் அள்ளியெடுக்க முயற்சிசெய்து தோற்றவாறே இருக்கிறேன்.

அப்பொழுது ஆறு வயதிருக்கும். பள்ளி விழாவொன்றில் பாடுவதற்காக மனனம் செய்த பாரதியின் வரிகள்.... “சொல்லுக் கடங்காவே பராசக்தி சூரத்தனங்களெல்லாம் வல்லமை தந்திடுவாள் பராசக்தி வாழியென்றே துதிப்போம்”...... “சுற்றி நில்லாதே போ பகையே&துள்ளி வருகுதுவேல்”..... தந்தையின் விரல்பிடித்து நின்றவள் ஓடோடி மேடையேறி, கண்களை உருட்டி, கைகளை வீசி, ஒப்பித்துவிட்டுக் கர்வமாய் நடந்து திரும்புகிறேன். சொற்கள் குருதிக்குள் குதித்தோடித் துள்ளும் அந்தப் பெருமகிழ்வு மிக இளம்வயதிலேயே வாய்த்தது. மிக மங்கலாகப் பாரதி பற்றிய முதல் நினைவு எனக்குள் இதுதான். பள்ளிக்கூடத்தின் பெயரும் பாரதி வித்யாலயாதான். பாரதியின் பாடல் இன்றி ஒரு நிகழ்ச்சியும் நடந்தேறியதாக நினைவில் இல்லை. படித்த பள்ளியும் என் அப்பாவும் அறிமுகப்படுத்திய பாரதி....

வளரிளம்பருவத்தில் ‘சித்திரபாரதி’ முதலிய நூல்களைப் புரட்டிய நினைவு. ஆழ்ந்து பாரதியைக் கற்க முயற்சித்து இன்னமும் முடியவில்லை. கல்லூரி நாட்களில்

தொடர்ந்த வாசிப்பில் புரிந்தது ஒரேயோர் உண்மை. பாரதி ஒரு பிரம்மாண்டம். தமிழிலக்கியச் சூழலில் பெண்ணியம் சார்ந்த படைப்புகளும் விமர்சனங்களும் கால்கொள்வதற்கு அடித்தளமிட்டவர் பாரதி. பெண்ணுக்குக் கற்பிக்கப்பட்ட மரபான கருத்தாக்கங்களை மறுதலித்துப் புதிய கருத்தாக்கங்களைக் கட்டியெழுப்பியவர் பாரதி. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய மரபான குணங்களைப் புறந்தள்ளிவிட்டு, ஞானம், நல்லறம், வீரம், சுதந்திரம் ஆகிய புதிய குணங்களைப் பெண்கள் வளர்த்தெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியவர் பாரதி.

பாரதியைப் பல தளங்களில் தொடர்ந்து ஆய்வுசெய்து வருவோர் மத்தியில், பாரதியின் பெண்விடுதலைக் கருத்தாக்கம் குறித்து விளங்கிக் கொள்வதற்காக எழுதப்பட்ட ஆய்வு நூல் இது. இச்சிறு நூலையும் பாரதி ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பது என் நம்பிக்கை. இந்நூல் உருவாக ஊக்கமளித்த புதுவைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பா.இரவிக்குமாருக்கும், குடும்பத்தினருக்கும் தொடக்க நிலையில் உறுதுணையாக இருந்த நண்பர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி. மின் நூலாக வெளியிட முன்வந்த முனைவர் சுரேஷ் மற்றும் குழுவினருக்கும் நன்றி.

**மகிழ்வுடன்**

**ப. கல்பனா**

# ஆழ்ந்த கவியுள்ளம் காண....

பாரதியின் படைப்பாக்கம் குறித்து எத்தனையோ ஆய்வுகள் வெளிவந்துவிட்டாலும் பிரபஞ்சவெளி விரிந்துகொண்டே செல்வதைப்போல பாரதி தன் எழுத்துகளின் மூலமாக விரிந்து கொண்டே செல்கிறான். காலத்தை மீறி ஒரு மனிதன் சிந்திப்பது சாத்தியமில்லை என்றாலும், தமிழ்ச் சூழலில் பாரதிஅளவிற்குத் தாக்கத்தைச் செலுத்திய வேறு ஒரு கவிஞனை என்னால் சிந்தித்துப் பார்க்க இயலவில்லை. ஆனால், ஒரு கவிஞனைப் புனிதப்படுத்துவதோ, அளவிற்கு மீறிப் போற்றுவதோ, தூற்றுவதோ ஆய்வில் கூடாது. தகுந்த சான்றுகளுடன் ஒரு கவிஞனின் எழுத்துகளை ஆய்விற்குட்படுத்தி மதிப்பீடு செய்யவேண்டும்.

சாதியம், பெண்ணியம், தேசியம், மொழி, அறிவியல், இலக்கியம், மொழிபெயர்ப்பு, படைப்பு என்று சகல துறைகளிலும் பங்களிப்பு செய்திருக்கின்ற பாரதியை ஆய்வு செய்வதற்கும் கடுமையான உழைப்பு அவசியம். சமுதாயத்தைப் பற்றிய தெளிவான புரிதலின்றி பாரதி குறித்த ஆய்வுகள் சாத்தியமில்லை. இன்றைய ஆய்வின் போக்குகள் குறித்துச் சிலவற்றைக் குறிப்பிட வேண்டும். ஒரு படைப்பாளனின் முழு எழுத்துகளையும் உள்வாங்கிக் கொள்ளாமல், சிலவற்றை மட்டும் படித்துவிட்டுத் தங்கள் கருத்துகளைத் திணிக்கும் போக்கே இன்றைய ஆய்வுலகில் நிகழ்கிறது.

ஆழ்ந்து, ரசித்து, ருசித்து ஒரு படைப்பாளனை அவன் வாழ்ந்த காலகட்டத்தில் நிறுத்தி மதிப்பிடும்போக்கு மிகவும் குறைவு.

இச்சூழலில், ப.கல்பனா பாரதியின் பெண்ணியக் கருத்து களைக் கவிதை, கட்டுரை, சிறுகதை என அனைத்து வகைமை களையும் ஆராய்ந்துள்ளது சிறப்பு. வ.கீதா, ரவிக்குமார், பாரதிபுத்திரன், செ.கணேசலிங்கன், பெ.கோ.சுந்தரராஜன், கு.ப.ராஜகோபாலன், ஆ.வேலுப்பிள்ளை, செல்லப்பன், சீனி.விசுவநாதன், ஜி.ஜான்சாமுவேல், ப.அருணாசலம், தி.கமலி, கா.சிவத்தம்பி, அ.மார்க்ஸ், பா.இறையரசன், பிரம்மராஜன், ஆர்.சிவகுமார் என்று பல்வேறு அறிஞர்களையும் கவிஞர்களையும் மேற்கோள் காட்டியிருப்பதன் வழி, பாரதி குறித்த தன் பரந்த வாசிப்பை இந்நூலின் வழி நிறுவியுள்ளார்.

பாரதியின் எழுத்துகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு அர்த்தங்களை உற்பத்தி செய்பவை. பாரதி பன்முகத்தன்மை கொண்ட மகாகவி என்பதை நிறுவும் முயற்சியாகவே இந்த ஆய்வை நான் புரிந்துகொள்கிறேன்.

யாதுமாகி நின்றாய் காளி! எங்கும் நீ நிறைந்தாய்

தீது நன்மையெல்லாம் காளி! தெய்வ லீலையன்றோ

என்னும் 'காளிப்பாட்டு' எனத் தோன்றும் பாடலை, ஒரு கணவன் தன் மனைவியைப் பார்த்துப் பாடுவதாகவோ, ஒரு காதலன் தன் காதலியைப் பார்த்துப் பாடுவதாகவோ ஏன் கொள்ளக்கூடாது?

என வினவும் கல்பனாவை, படைப்புத்தளத்தில் நின்று புரிந்துகொள்ளவேண்டும்.

ஆய்வு என்பது படைப்பிற்கு எதிரானதல்ல; வெற்று உண்மைகளை வறட்சியான மொழிநடையில் பறைசாற்றுவதும் அல்ல; ஒரு கவிஞனின் மனநிலையைப் புரிந்துகொண்டு மேற்கொள்ளப்படுவது.

பாரதியை ஒரு பிரம்மாண்டம் என்று மதிப்பிடுகிறார் ப.கல்பனா. பாரதி போன்ற பிரம்மாண்டமான மகாகவி குறித்து ஆய்வு செய்வது சற்றுக் கடினம்தான்.

பாரதியின் பாடல்கள், கட்டுரைகள், சிறுகதைகள் என அனைத்தையும் படித்துவிட்டு, வரலாற்றில் அவன் என்னவாக இருந்தான்? பெண்விடுதலைக்கு எவ்வாறு குரல் கொடுத் தான்? மரபுகளும் நவீனமும் எவ்வாறு அவன் எழுத்துகளில் வெளிப்பட்டன என்பதைத் தகுந்த சான்றுகளுடன் சுட்டும் இந்த ஆய்வு, தொடர்ந்து பெண்ணியம் குறித்த உரையாடலை மேம்படுத்த உதவும் எனக் கருதுகிறேன்.

இச்சிறுநூல், ஆய்வாளர்க்கும், பேராசிரியர்களுக்கும் பாரதியை உணர்த்தும் கையேடு.

ப.கல்பனாவுக்கு என் வாழ்த்துகள்…

**முனைவர் பா. இரவிக்குமார்**

# உள்ளடக்கம்

முன்னுரை ..........................................................................................1

பெண்விடுதலைப்பாடல்கள் ……………………………………………9

பாரதி காலம் ……………………….………………………………..11

பீடு ஓங்கும் பெண்மை ……………………………………………..19

நங்கை கூறும் வியப்புகள்…………………………………..……...21

நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் ………………………..….25

வீரப்பெண்கள்…………………………………………………………29

மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்…………………….…..35

பெண் விடுதலைக் கும்மி……………………………..…………..41

பெண் விடுதலைக் கருத்தியல்………………………………………51

அக்னிக் குஞ்சு………………………………………………………..57

துணைநூற்பட்டியல்……………………………………………………62

# முன்னுரை

தேசியகவி, மொழிப்பற்றாளர், பெண் விடுதலையைப் பாடியவர், சாதி எதிர்ப்பாளர், பக்திக் கவிஞர், தீர்க்கதரிசனம் படைத்தவர், உணர்ச்சி வெறியேறிப் பாடுபவர் என்றெல்லாம் பாரதியாரைப் பற்றிப் பொது புத்தி சார்ந்த சடங்குத்தனமான சொல்லாடல்கள் பல கட்டப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றிலும் ஓரளவு உண்மை உண்டு என்றாலும், இவையே முழு உண்மை ஆகா. ஆனால், தமிழ் ஆய்வுலகில் இந்திய விடுதலைக்கு முன் பாரதியார் இவ்வாறுதான் அறிமுகப்படுத்தப்பட்டார், ஆராயப்பட்டார், அடையாளம் காட்டப்பட்டார். பாரதியார் பற்றிய இந்த மதிப்பீடுகள் ஒவ்வொன்றும், இன்று கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி வருவதைக் காண்கிறோம். இத்தகைய விமர்சனங்களின் ஊடாகவும் இவற்றைக் கடந்தும், பாரதியார் மேலும் வாசிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு வருகிறார் என்பதில்தான் அவரது பெருமையுள்ளது.

பாரதியாரை விமர்சிப்பது, ஒரு தனிமனித ஆளுமையை மறுப்பது அல்லது ஏற்பது என்பதாக மட்டும் குறுகிவிடவில்லை. மாறாக, பரந்துபட்ட சமூகநலன் சார்ந்த பல்வேறு கருத்துகளின் ஊடாட்டமாகவும் போராட்டமாகவும் பாரதியார் ஆய்வுகள் பெருகி வருகின்றன. நேற்றைய வாசிப்பில் காணப்பட்ட பொருள், இன்றைய வாசிப்பில் மற்றொன்றாகத் தோன்றும் ரசவாத மாற்றத்தையும் பாரதியாரிடம் காண்கிறோம். எனவே, பாரதியை மையப்படுத்தி எழுந்த பல்வேறு அடைமொழிகளும் அவருக்குப்

பொருத்தமானவைதாமா என்ற கேள்வி, இன்று முனைப்புடன் உயிர்ப்புற்றுள்ளது.

‘பாரதி காலத்தை வென்றவராக இருந்தாரா அல்லது தாம் வாழ்ந்த காலம் போற்றிய அறிவு வரம்புகளுக்கு உட்பட்டும், சிற்சில கணங்களில் மட்டுமே அவரது கற்பனையும் ஆழ்மனக்களிப்பும் வரலாற்றுச் சூழல்களைக் கடந்த கணங்களில் மட்டுமே, அவரால் காழ்ப்புகளையும் கருத்தியல்களையும் கடந்து சமத்துவமும் அமைதியும் மோனநிலையும் அடைய முடிந்ததா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கும். இதுபோன்ற கேள்விகள் பாரதியின் ஆளுமையைக் குறித்த சுவையான ஆய்வுகளுக்கு நம்மை இட்டுச் செல்லக்கூடும்’ என்கிறார் வ.கீதா (Mathimaran V., 2006). இக்கூற்றின் வழிப்பட்டுப் பாரதியைப் புனைவுபடுத்தித் தெய்வநிலைக்கு உயர்த்தவோ புனிதத்தை உடைப்பதாகக் கூறி இழிவுபடுத்தவோ செய்யாமல், பாரதியின் அனைத்துப் படைப்புகளையும் வெவ்வேறு வகைகளில் மறுவாசிப்புக்குட்படுத்தி, அவரது உண்மையான கவி ஆளுமையைக் கருத்தியலைத் தெளிவாக வரையறுக்க முற்படுதலே நலம் பயக்கும் செயல்பாடு எனலாம்.

இலக்கியம், தன் எழுத்தால் மட்டுமன்றி, காலத்தின் ஒரு திருப்பத்தில் முக்கியத்துவம் பெறுகிறவர் பாரதி. அதனால், இந்தக் காலத்தின் திருப்ப வேகம் தணியத் தொடங்கிய பிறகே, அவரை இலக்கிய மதிப்பீடு செய்து கவியாகவும் வசனகர்த்தாவாகவும் பலதுறைகளில் பரிசோதனை செய்து பார்த்த இலக்கிய ஆசிரியனாகவும் நாம் அறிந்து கொள்ள முடியும். அதற்குக் காலம் இன்னும் வரவில்லை. அதற்கு இன்னும் இரண்டொரு தலைமுறைகள் ஆகும் என்று க.நா.சுப்பிரமணியன் எழுதுகிறார் (Subramaniyan, K.N., (2017). பழமையைக் கொண்டாடும் அதே நேரத்தில், புதுமையின் விதைகளையும் தம்முள் தக்கவைத்துக் கொள்வதில் தான் பாரதியாரின் ஆளுமை மையம் கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது. சான்றாக, ‘வெறி கொண்ட தாய்’ என்னும்

பாடலைக் காண்போம்.

பேயவள் காண் எங்கள் அன்னை&பெரும்பித்துடையாள் எங்கள் அன்னை காயழல் ஏந்திய பித்தன்தனைக் காதலிப்பாள் எங்கள் அன்னை இப்பாடல், இந்திய விடுதலைப் போராட்டத்தைக் கருவாகக் கொண்டு பாடப்பட்டதாகவும், இதில் வரும் தாய் பாரதமாதாவைக் குறிப்பதாகவும் அறிஞர் உரைத்துள்ளனர் (Chandrasekaran, 1996). இலக்கிய நுண்ணுணர்வுடனும் தற்காலப் பிரக்ஞையுடனும் இப்பாடலை ஆராயும் போது, இப்பாடலில் வரும் ‘தாய்’ என்பது பாரத மாதாவுக்கு மட்டுமேயான குறியீடு அன்று; இன்றைய பாரதப் பெண்ணுக்குமான குறியீடும் ஆகும் என்பதை எளிதில் அறியலாம். இவ்வாறு ஒன்றைக் குறிக்கும் போதே வேறொன்றையும் சுட்டி நிற்கும் கவிதைப் பண்பால்தான், பாரதியின் பாடல்கள் நேற்றொரு பொருளையும் இன்றொரு பொருளையும் கருக்கொண்டுள்ளன. இன்றைய வாசிப்பில் பெண் விடுதலை பற்றிய பாடலாகவும், வேறொரு தளத்திலும் இப்பாடலை நாம் பொருள் கொள்ளலாம்.

‘தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதான விமர்சனத்தைக் காரணமாகச் சொல்லிப் பாரதியின் கவிதைகளை நிராகரிப்பதோ, அவரது கவிதைகளின். ஆற்றலை வியந்து அவரை அரசியல் வழிகாட்டியாகக் கொள்வதோ சரியல்ல. பாரதி தனது எழுத்தைத் தனக்கு எதிராக நிறுத்தும் மனவலிமை கொண்ட படைப்பாளி; அவன் விக்கிரகமாகத் தேங்கமாட்டான்’ என்பதால், முழுவதும் போற்றவோ தூற்றவோ முனையாமல், பாரதியின் காலங்கடந்து நிற்கும் கவி ஆளுமையைக் கண்டறிதலே பொருத்தமானதாகும் (Yakan, 2004). பாரதியின் பிரதி, வேறு வேறு காலங்களில் வேறுவேறு பொருள்களைத் தருவதாய் அமைந்துள்ளது. இது பற்றி, ‘தமிழ்க்கவிதை மரபிற்கு இது முற்றிலும் புதுமையானது. பொருளைச் சுமந்து வரும் வாகனமாகத் தன்னைச் சுருக்கிக் கொள்ளாமல், வாசக அனுபவத்திற்கேற்ப எல்லையற்று விரிந்து செல்லும் பண்புடையது. சமகால வாசகன் ஒருவன் தன் வாசிப்பை நிகழ்த்திச் சமகால அனுபவத்தை இக்கவிதையிலிருந்து

பெறமுடியும். காலத்தின் முன் சென்று எதிர்கால வாசகனையும் பாரதி இங்கு எதிர்கொள்கிறார்' எனும் கருத்தும் ஆராய்தற்குரியதாகும். 'காளிப்பாட்டு' என்று தலைப்பிடப்பட்ட கவிதையை ஆராய்வோம்.

**யாதுமாகி நின்றாய் ! காளி! எங்கும் நீ நிறைந்தாய்**

**தீது நன்மையெல்லாம் ! காளி! தெய்வ லீலையன்றோ?**

**பூதமைந்தும் ஆனாய் ! காளி! பொறிகள் ஐந்துமானாய்**

**போதமாகி நின்றாய் ! காளி! பொறியை விஞ்சி நின்றாய் (பாரதி. ப. 67)**

வெளிப்படையாகப் பார்க்கும்போது 'காளிப்பாட்டு' எனத் தோன்றும் இப்பாடலை, ஒரு கணவன் தன் மனைவியைப் பார்த்துப் பாடுவதாகவோ, ஒரு காதலன் தன் காதலியைப் பார்த்துப் பாடுவதாகவோ ஏன் கொள்ளக்கூடாது? தோத்திரப்பாடல்களின்கீழ்த் தொகுக்கப்பட்டுள்ள இப்பாடலைப் பாரதியாரின் காதல் பாடல்களின் வரிசையிலும்கூடச் சேர்க்க இயலுமே? பாரதி, நிவேதிதாதேவியைத் தம் குருவாகக்கொண்டு கவிதை படைக்கிறார் (Chandrasekaran, 1996).

**அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர் கோயிலாய் அடியேன் நெஞ்சில்**

**இருளுக்கு ஞாயிறாய் எமதுயர்நாடாம் பயிர்க்கு மழையாய் இங்குப்**

**பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப் பெரும்பொருளாய்ப் புன்மைத்தாதச்**

**சுருளுக்கு நெருப்பாகி விளங்கியதாய் நிவேதிதையைத் தொழுது நிற்பேன்**

**(பாரதி. ப. 254)**

ஆண் பெண் சமத்துவக் கருத்தாக்கத்தை நிவேதிதையிடமிருந்து பெறும் பாரதி, அதற்குத் தாம் செலுத்தும் நன்றி அறிவிப்பாக, இப்பாடலைப் படைத்துள்ளார் (Chandrasekaran, 1996). பாரதிக்கு முன், இவ்வளவு ஆழமான முறையில், ஒரு பெண்ணைத் தன் குருவாக ஏற்றுக்கொண்டு தொழுது வணங்கிய சிந்தனையாளர்கள் உலகில் எத்தனை பேர்? இது போன்றவை, நவீன மரபுக்கு உரியவையல்லவா?

எனவேதான், பாரதியார் பற்றிய விமர்சனங்களும், மக்களுடன்

தொடர்புடைய அனைத்துக் கருத்து நிலைகளிலிருந்தும் எழுப்பப் படுகின்றன. இதன் விளைவாகப் பாரதிபுத்திரன் கூறுவது போல, 'நமது சமுதாயத்தின் சாதி, மத, வர்க்க, அரசியல் நிலைப் பாடுகளுக்கேற்ப, அவன் முறையாகவும் முறையற்றும் விமர்சிக்கப் பட்டுக்கொண்டேதான் இருக்கிறான். இந்த எல்லாத் தரப்புகளின் ஊடாகவும் பயணப்படுவதின் மூலமாகத்தான், நாமும் அவனைப் புரிந்துகொள்ள முடியும்' எனலாம் (Ravikumar, B., and Pachiappan, 2002). தாம் பிறந்து வளர்ந்த சமுதாயத்தின் நாடித்துடிப்பாக விளங்கிய பாரதியார், மக்களை நோக்கிக் கவிதை என்ற காலத்தேவையின் பரிணாம வளர்ச்சியில் மலர்ந்தவராவார். பாரதியின் பொருளாழத்திற்குச் சான்றாக, 'வண்டிக்காரன் பாட்டு' அமைகிறது.

சிறுதெய்வ வழிபாடு, பெண்தெய்வ வழிபாடு ஆகியன, இக்கவிதையில் முதன்மை பெறும் அம்சங்களாயுள்ளன. ஆண்களிருவருக்கிடையில் நடைபெறும் உரையாடலில் (கண்ணன் பாட்டும், வேலன் பாட்டும் எழுதிய) பாரதியார், வீரம்மையையும் மாரியம்மையையும் காவல் தெய்வங்களாகக் கூறுவது குறிப்பிடற்குரியது. விடுதலைக்கு முன், சுடலைமாடன், ஐயனார், கருப்பசாமி என்று ஆண் சிறுதெய்வங்கள் மேலோங்கியிருந்த காலத்தில், பெண்தெய்வமான கருத்தமாரியின் வீரச் சிறப்பைக் கூறுவதும் கூடப் புதுமைதான். பாரதி முன்னெடுத்த விசயங்கள் இன்று பல்வேறு ஆய்வு விமர்சனப் போக்குகளாக வளர்ந்து நிற்கின்றன. இது பற்றிப் 'பழமையில் இருந்து புதுமைக்கு மாறும் காலகட்டத்தின் நடுவழியிலே, தமிழ்ச்சமூகத்தில் தோன்றிய ஒரு மாபெரும் நவீன சிந்தனையாளனாக, படைப்பாளியாகப் பாரதியைக் காண்கிறோம். அந்த வகையிலே அவன் ஒரு யுகபுருஷனாகிறான்' என்கிறார் எம். ஏ. நுஃமான் (Nuhmaan, M.A., 1985). 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்ற தமிழ் மரபில், இத்தகைய பார்வை புத்தம் புதியதாகும். 'பெண் விடுதலை' குறித்த கவிதையில், 'அறிவு யாவும் பயிற்சியில் வென்றே கடமை செய்வீர்' என்று பெண்களுக்குக் கூறும் அறிவுரையிலும், பாரதியின் புதிய வீச்சினைக் காணலாம்.

பிரதியை எழுதியவனின் நோக்கத்தையும் மீறி, பிரதிக்குள் பன்முகத்தன்மை இருக்குமா என்பது ஒரு சுவையான வினா. இவ்வினாவிற்கு

அளிக்கப்படும் பதிலில்தான், பாரதியின் நிலைபேற்றுத்தன்மை அடங்கியுள்ளது. பாரதி குறித்து வரா. கூறும் கருத்து, ஆண்டுகள் பல கடந்தும், பொருத்திப் பார்க்க ஏற்ற சிந்தனையாகத்தான் தோன்றுகிறது. 'பாரதியாரை நினைத்தால் எனக்குப் பயமாயிருக்கிறது. ஏன்? நேற்றைக்குப் படித்த கவிதையை இன்றைக்குப் படித்தால், புதிது புதிதாக அழகும் பொருளும் சுவையும் கண்ணுக்குத் தென்படுகின்றன. நாம் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்து கொண்டு போகிறோமோ, அதற்குத் தகுந்தாற்போல, பாரதியின் கவிதை என்ற சங்கப்பலகை நீண்டுகொண்டே போய், நமக்குத் தங்குமிடம் கொடுக்கிறது. இது என்ன விசித்திரமான கவிதை!' (Mahakavi Bharathiar V.R., 2004).

பாரதியின் கவிதைகளில் பழம்பொருள் ஒன்று இருக்கிறது; காலப்போக்கில் புதுப்புதுப் பொருள்கள் சேர்கின்றன. பாரதியின் பிரதிகள், ஒரு கருத்துக்கு ஆதரவு தெரிவிக்கவும் செய்கின்றன. எதிர்க்கருத்துகளை முன்வைக்கவும் செய்கின்றன. பாரதியின் எதிரும் புதிருமான கருத்துகளைப் பிரதிக்குள் எவ்வாறு சமன் செய்து நிகழ்காலத் தேவைகளுக்கேற்பப் பொருள்படுத்துகிறோம் என்பதுதான், பாரதியார் படைப்புகளில் எதிர்கொள்ளும் முதன்மையான அறைகூவலாகும். எதைப் பேசும்போதும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றையும் தொட்டும் வளர்த்தும் பிணைத்தும் பேசும் பண்பைப் பாரதியிடம் காண்கிறோம். இப்பண்பினால் பாரதியின் பனுவல்கள், எப்போதும் தேக்கமற்ற இயங்கியல் தன்மையுடனும் காலத்தால் சாகாத உயிர்ப்புடனும் உள்ளன. இத்தகைய இயங்கியல் தன்மையைத்தான், இன்றைய உலகம் படைப்பாளர்களிடம் கோருகிறது. இத் தேவையை நிறைவு செய்யும் வகையில், சென்ற காலத் தமிழ்க்கவிதைச் சாதனையாளர்களோடும், சமகாலப் படைப்பாளுமைகளோடும், இனிவரும் புதிய தலைமுறைக் கலைஞர்களோடும் ஒப்பவைத்துக் காணப்படும் நிகழ்காலப்பான்மை கொண்டவராகப் பாரதியார் திகழ்கிறார். இப்படிப்பட்ட படைப்பாளுமை கொண்ட பாரதியாரைப் பனுவல் கோரும் வாசிப்பு உழைப்பு இல்லாமல் விளங்கிக்கொள்ளவியலாது!.

இன்று உலகளவிலான ஒரு பேசுபொருளாகப் பெண்ணியம் திகழ்கிறது. இயேசு நாதராகட்டும், ஷேக்ஸ்பியராகட்டும், பெண்ணைப் பற்றிய

அவர்களது பார்வை யாது என்பதைப் பொறுத்துத்தான், அவர்களின் சமகாலச் சமூக மதிப்பை அறியவியலும். அதாவது, பண்டைய வரலாற்று நாயகர்களின் ஆளுமையாளர்களின் சமத்துவத்தையும் சமகாலப் பெறுமதியையும் சீர்தூக்கி ஆராயும் அளவுகோலாகப் பெண்ணியமே இன்று திகழ்கிறது. இப்பெண்ணிய நோக்குவழி நின்று, இருபதாம் நூற்றாண்டின் மகத்தான தமிழ்க்கவிஞரும் ‘சரிநிகர் சமானத் தத்துவத்தைப்’ பேசியவருமான பாரதியாரின் பெண் விடுதலைப் பாடல்களை நுணுகி ஆராய வேண்டியது நம் சமகாலத் தேவை.

பாரதியார் ஆக்கங்களில் குறிப்பாகக் கவிதைகளில், பெண் விடுதலை குறித்துப் புரட்சிகரமாகவும் பரிவுடனும் கூடிய பல சித்திரங்கள் காணக் கிடைக்கின்றன. இவற்றில் ‘பெண்’ பற்றிய தாழ்வுப் புனைவுகளைக் கட்டுடைத்துப் பெண்ணைப் படைப்பாற்றலின் ஊற்றாகத் தொடர்ச்சியான இயக்கத்தின் வெளிப்பாடாகச் சட்டங்கள் செய்யவும் பட்டங்கள் ஆளவும் வந்தவளாகச் சரிநிகர் சமானத் தத்துவத்தை நடைமுறை வாழ்விலும் பெறப் போராடுபவளாகச் சக்திப் பிழம்பாகப் பாரதியார் கண்டு காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும். மரபின் செழுமையான விழுமியங்களை ஏற்றுப் போற்றும் பாரதியார், பெண்ணைக் குறுக்கி ஒடுக்கும் ‘அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு’ போன்ற ‘பெண்களுக்கு மட்டுமே கற்பிக்கப்படும் இறுக்கமான கட்டுகளைக் கடுமையாக எதிர்க்கிறார். இவற்றுக்கு மாறாக ‘ஞானம் வீரம் சுதந்திரம் நல்லறம்’ என்பனவற்றைப் புதிய பெண்மைக்குரிய மாற்றுக் கருத்தியலாகப் பரிந்துரைக்கின்றார்.

குழந்தை மணத்தையும், ‘சதி’ வழக்கத்தையும், பலதார மணத் தையும் சமரசம் ஏதுமின்றிப் பாரதியார் எதிர்க்கிறார். பெண்கள் கல்வி கற்பதையும், வேலைக்குச் செல்வதையும், தற்சார்பு வாழ்க்கைத் தகுதி பெறுவதையும் முழுமனத்துடன் ஆதரிக்கிறார். விதவை மறுமணத்தை ஏற்பதுடன் மட்டுமல்லாமல், பெண்களுக்கு ‘மணவிலக்கு’ உரிமை வேண்டும் என்றும் பாரதி குரல் எழுப்புகிறார். சமநீதிச் சட்டத்தின் அடிப்படையிலான ‘சரிநிகர் சமான’ வாழ்வைப் பெண்கள் பெறவேண்டும் என்ற விழைவைத் தம் கவிதைகளில் வாய்ப்புக் கிடைக்கும் இடங்களிலெல்லாம் தவறாமல் அவர் வலியுறுத்தக் காண்கிறோம். இந்தியத் தமிழ்ச் சமூகத்தில் பெண்பால்

கோட்பாடாக நிலைபெற்றுவிட்ட கற்புக் கோட்பாட்டைப் பெண்ணுக்கும் ஆணுக்கும் பொதுவாக்கிப் பாடிய பெருமையும் பாரதிக்கு உண்டு. மேலும், தாம் வாழ நேர்ந்த ஆணாதிக்கச் சமூகத்தின் எதிர்ப்புனைவாகத் தம் புதுமைப்பெண்ணைப் பாரதி புனைந்ததாகவும் துணியலாம்.

பெரும்பாலும் பாரதியார் கவிதைகளில் 'பெண்' ஆக்கப் புனைவாகவே படைக்கப் பட்டுள்ள போதிலும், சில இடங்களில் 'பெண்' குறித்த 'ஆண்' நோக்கும் பாரதியிடம் காணப்படவே செய்கிறது. அண்மைக்காலமாகத் தமிழ் இலக்கியங்களைப் பெண்ணியத் திறனாய்வின் அடிப்படையில் ஆராயும் ஆய்வுகள் பெருகியுள்ள சூழலில், பெண் விடுதலைக்காக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துணிந்து குரல் கொடுத்த பாரதியாரும், அவ்வகையில் ஆராயப்பட வேண்டியவராகிறார்.

# பெண் விடுதலைப் பாடல்கள்

பாரதியார் கவிதைகள் தொகுப்பில், ‘பெண் விடுதலை’ என்ற தலைப்பின் கீழ், ஆறு பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடல்களில், பெண்ணைப் பற்றிய பாரதியின் பல்வேறு புதுமையான சிந்தனைகளையும், பெண்ணடிமைத்தனத்தைக் கடிந்து எதிர்க்கும் புரட்சிகரமான பெண் சார்புக் குரலையும் காண்கிறோம். இவ்வாறு பெண் சார்புக் குரலைப் பாரதி பதிவு செய்வதற்கு,

> **“காவியங்களிலே காட்டியிருக்கிற அளவு உயர்வான நிலையை நடைமுறை வாழ்க்கையில் பெண்ணுக்கு அளிக்கவில்லை என்பது அவருடைய முடிவு. அந்த வருத்தத்திலே எழுந்த பாடல்கள் தாம் பெண் விடுதலை, புதுமைப்பெண் ஆகிய சொற்சித்திரங்கள்”** (தி.சா. ராஜு, பாரதி - ஒரு வாழ்நெறி, பக்.81-82.)

எனக் காரணம் கற்பிப்பர் (Raju, T.S., 1976). பாரதியின் இலட்சியங்களுள் ஒன்றாகப் பெண் விடுதலையை இப்பாடல்கள் காட்டுகின்றன. இப்பாடல்களில் இடம்பெறும் பாரதியின் புதுமைப்பெண், சுயசிந்தனையும் செயல் வேகமும் சமூக அக்கறையும் புதுமைவேட்கையும் கொண்டவளாகப் படைக்கப் பட்டுள்ளாள். மேலும், ஆணாதிக்கத்தை எதிர்த்துப் பெண் விடுதலை வேண்டித் துணிந்து போராடுபவளாகவும், உலக வாழ்வின் நுட்பங்கள் தேர்ந்து வாழும் ஞானச்செருக்குப் பெற்றவளாகவும் திகழ்கிறாள்.

காதல், கற்பு, மணம், குடும்பம் ஆகியன பற்றிய மரபுசார்

விழுமியங்களைப் பெரிதும் ஏற்றுக்கொண்டவளாகப் பாரதியின் புதுமைப்பெண் காணப்படுகிறாள். இத்தகைய ஏற்பு என்பதைப் பெண்ணுக்கு ஆணாதிக்கம் வரையறுத்த கட்டுப்பாடுகளை ஏற்பதா கப் பொருள் கொண்டுவிடக் கூடாது. மாறாகப் பெண்ணுக்கும் ஆணுக்கும் ‘கற்பைப் பொதுவில் வைப்போம்’ என்பதுபோலப் பொதுநிலையில் வரையறுக்கப்படும் கட்டுப் பாடுகளைச் சமூக நன்மைக்காகப் புதுமைப்பெண் ஏற்பதாகவே பாரதி பாடுகிறார்.

ஆணைத் தவிர்த்துப் பெண்ணுக்கு மட்டுமே அணிவிக்கப்படும் அடிமைச் சங்கிலிகளைப் பாரதியின் புதுமைப்பெண் உதறித்தள்ளி விடுகிறாள். இவ்வகையில், மனிதர் தம்மை அமரர்கள் ஆக்கும் ஆற்றல் பெற்றவளாகப் பாரதியால் புதுமைப்பெண் புனையப்படுகிறாள். இப்புதுமைப் பெண் குறித்து ஆராய்வதற்குமுன், பாரதி வாழ்ந்த காலச்சூழலில் பெண்களின் நிலைமை எவ்வாறு இருந்தது என்று காண்பதும், இத்தகைய நிலைமையைப் பாரதி எவ்வாறு எதிர்கொண்டார் என்று மதிப்பிடுவதும் இன்றியமையாததாகும்.

# பாரதி காலம் (1882-1921)

பாரதி வாழ்ந்த காலம், 1882-1921 எனும் முப்பத்தொன்பது ஆண்டுகளாகும். அக்காலகட்டத்தில், இன்று தீவிரமாகப் பேசப்படும் பெண் கல்வி, பெண்ணுக்குச் சொத்துரிமை, மணத்தேர்வு உரிமை, விதவை மண உரிமை, விவாகரத்து உரிமை ஆகியன பெண்களுக்கு இல்லை. குழந்தை மணக் கொடுமையும், பெண் கல்வி மறுப்பும், பலதார மணமும், வெறும் போகப்பொருளாக மட்டுமே பெண்ணைப் பார்க்கும் வாழ்வும் கோலோச்சிய காலம் அது. இத்தகைய காலகட்டத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து இறந்துபோன பாரதி, தம் காலத்தில் நிலவிய பெண்ணடிமைத்தனத்துக்கு எதிராகத் தம் கவிதைகளைப் படைத்தார். இக்கவிதைகளில், பெண் விடுதலைக்கு ஆதரவாகப் பாரதி குரலெழுப்பினார். புதிய விழிப்புப் பெற்ற 'புதுமைப்பெண்' எனும் கருத்தாக்கத்தைப் படைப்பதில் பாரதி குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றதைப் பெண்ணுரிமை தொடர்பான அவரது கவிதைகள் காட்டுகின்றன எனலாம்.

இந்தியத் தேசிய விடுதலைப் போராட்டம், அதன் உச்சநிலையை அடைந்த வரலாற்றுத் திருப்புமுனைக் காலகட்டத்தில், இந்தியப் பெண்களின் சமூகத் தகுதிநிலை குறித்துக் கேள்விகளையெழுப்பும் முனைப்பான போராட்டங்களைச் சமூகச் சீர்திருத்தவாதிகள் பலரும் முன்னெடுத்தனர். இச்சீர்திருத்தவாதிகளுள் ஒருவராகிய பாரதியும், பெண்ணுரிமைக்கான ஆதரவுக்குரலைத் தெளிவாகவும் வலிமையாகவும் பதிவு செய்தார். தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒருபகுதியாகப் பெண் விடுதலையையும் பாரதி

கண்டது குறிப்பிடத் தக்கதாகும். தேசிய விடுதலைக்குப் பின்னால் அடையப்பட வேண்டிய ஓர் இலட்சியமாகப் பெண் விடுதலையைப் பாரதி புறந்தள்ளவில்லை; மாறாகப் பெண் விடுதலையைத் தேசிய விடுதலையுடன் தொடர்புடைய பிரிக்கவியலாத ஓர் உடன் நிகழ்வாகவே பாரதி கண்டார். மேலும், வெறும் இலட்சியவாதமாக மட்டுமல்லாமல், நடைமுறை வாழ்விலும் பெண் விடுதலையைச் சாத்தியப்படுத்த விழைந்ததுதான், பாரதியின் தனிச் சிறப்பாகும்.

ராஜாராம் மோகன்ராய் போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகள் அளித்த நெருக்கடிகள் காரணமாகப் பல்வேறு சட்டங்களை ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இயற்றினர். பால்ய விவாகத் தடைச் சட்டம், சதி எனும் உடன்கட்டையேறும் வழக்கத்தைத் தடை செய்யும் சட்டம், பலதார மணத்தடைச் சட்டம், தேவதாசி ஒழிப்புச் சட்டம், விதவை மறுமணச் சட்டம் போன்ற பல முற்போக்கான சட்டங்களை ஆங்கிலேயர் இயற்றியளித்தனர். இச்சட்டங்கள், பழமையில் மூழ்கித் திணறிக் கொண்டிருந்த இந்தியச் சமூகத்துக்குக் குறிப்பாகக் குடும்பச் சுமையில் சிக்கி அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியப் பெண்களுக்குப் புதிய உரிமைகளையும் வாய்ப்புகளையும் வழங்கின. விளைவாகப் பெண்கள் கல்வி கற்றலும், ஆணுக்குச் சமமான உரிமைகள் பெறுதலும் படிப்படியாக இந்தியச் சமூகத்தில் மிகுதிப்படத் தொடங்கின.

படித்த பெண்களின் எண்ணிக்கை பெருகப் பெருகப் பெண் விடுதலை என்பது நடைமுறைச் சாத்தியம்தான் என்ற நம்பிக்கையும், இந்தியப் பெண்களிடம் உறுதிப்பட்டது. இத்தகைய ஆக்கபூர்வமான சமூக மாற்றத்தை மனம் உவந்து வரவேற்றவர்கள், அன்று மிகச் சிலர்தான். இவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் பாரதி என்பதால், தம் கவிதைகளில் ‘பெண் விடுதலை’ என்ற கருத்தியலைப் பிரக்ஞைபூர்வமாகப் பாரதி பேச முனைந்தார் எனலாம்.

பாரதி காலத்துக்கும் தற்காலத்துக்குமிடையில் எவ்வளவோ அகப்புற மாற்றங்கள் இந்தியச் சமூகத்தில் நிகழ்ந்துள்ளபோதிலும், பெண்ணுரிமை தொடர்பான செயல்பாடுகளில் ‘சரிநிகர் சமானம்’ என்ற கருத்தியல் இன்னும் முழுமையாக நடைமுறைக்கு வந்து விடவில்லை என்பதைப் பின்வரும் 1985 ஆம் ஆண்டிற்குரிய ஐக்கிய நாடுகளின் அறிக்கையை எடுத்துக்காட்டி

விளக்குகிறார் செ. கணேசலிங்கன்.

> **“உலகின் பாதிப் பங்கினரான பெண்கள் ஆண்களினும் பார்க்க இருபங்கு நேரம் உழைக்கின்றனர்; நாள்தோறும் சராசரி 15 மணி நேரத்திற்குக் குறையாது உழைத்து, உலகின் மூன்றில் இரண்டு பங்கு வேலையைச் செய்கின்றனர்; உலகின் பாதி உணவைப் பெண்களே உற்பத்தி செய்கின்றனர். ஆனால் அவர்களுக்குக் கிடைப்பதோ உலகின் பத்தில் ஒரு பங்கு வருமானம்; சொத்துடைமையில் நூற்றில் ஒரு பங்கிற்கும் குறைவானது” (செ.கணேசலிங்கன், பெண்ணடிமை தீர, ப.6.)**

மேற்கண்ட புள்ளிவிவரக் கணக்கைச் சுட்டிக்காட்டும் செ. கணேசலிங்கன், இன்றளவிலும் ஆணாதிக்கச் சமூகமாகவே உலகம் இருப்பதாகவும், இந்த ஆணாதிக்க உலகில் வாழும் ஆண்களால் மிகக்கொடுமையான சுரண்டலுக்குப் பெண்கள் உள்ளாவதாகவும் கருத்துரைக்கிறார் (Ganesalingan, Che., 1997). 1985ஆம் ஆண்டளவிலேயே இந்த நிலைமை என்றால், பாரதி வாழ்ந்த 1882-&1921 எனும் காலப்பகுதி எவ்வாறு இருந்திருக்குமென ஊகிப்பதொன்றும் கடினமன்று. இத்தகைய காலப் பின்னணி பற்றிய அறிதலுடன் பாரதியின் பெண் கருத்தியலை அணுகும் போதுதான், தம் காலத்தின் குறுகிய எல்லைகளை மீறிச் சென்று சிந்தித்த மிகப்பரந்த மனமுடைய சிந்தனையாளராகப் பாரதி இருந்ததைப் புரிந்துகொள்ளவியலும்.

பன்னெடுங்கால மரபு காரணமாகத் தொடர்ச்சியாக இந்தியச் சமூகத்தில் இறுக்கமாக நிலவிவந்த கற்புக் கோட்பாடு, அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் ஏற்பட்ட தலைகீழ் மாற்றங்களின் விளைவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், அதன் பழைய கருத்தியல் தளத்திலிருந்து வெகுவேகமாக நெகிழத் தொடங்கியது. பெண்கள் கல்வி பெறுதல், வேலைக்குச் செல்லுதல், சொத்தில் பங்கு வேண்டுதல் ஆகிய உரிமைகள், பெண்களின் சமூக இருப்பு மற்றும் மதிப்புப் பற்றிய புதிய கேள்விகளையும் உடனெழுப்பின. எனவே, இந்தியச் சமூகத்தில், அதுகாறும் நிலவி வந்த ‘கற்பு’ குறித்த விதிகளும்

வரையறைகளும் தீவிரமான மறுபார்வைக்குள்ளாக்கப்பட்டுப் புதிய நோக்குகளின் அடிப்படையிலான விமர்சனங்களும் விவாதங்களும் முனைப்புப் பெற்றன.

கற்பைப் பற்றிய பாரம்பரியமான கருத்துகளும் மதிப்பீடுகளும், பெண்ணிய நோக்கிலிருந்து மீளாய்வு செய்யப்படும் நிலைமை தோன்றியது. இத்தகைய மீளாய்வைத் தம் கவிதைகளில் பாரதியும் செய்தார். கற்பைப் பெண்ணுக்கு மட்டுமே உரியதாகக் கண்ட சமூகப் பொதுநிலையிலிருந்து விலகிக் கற்பைப் பெண்ணுக்கும் ஆணுக்கும் பொதுவாக்கிப் பாரதி பேசியது, இந்தியக் கருத்தியல் வரலாற்றில் புதுமையானதும் புரட்சிகரமானதுமாகும்.

கற்பைப் பற்றிய மீளாய்வைப் பாரதி செய்ததைப் போலவே, அக்காலச் சூழலில் மிகவும் தீவிரமாகப் பேசப்பட்ட ‘விதவை மணம்’ குறித்தும் பாரதி தெளிவாகக் கருத்துரைத்தார். மழுப்பாமலும் குழப்பாமலும் விதவை மணத்தைப் பாரதி ஆதரித்தது, இங்குச் சிறப்பாகச் சுட்டத்தக்கதாகும். எனினும், தம் கவிதைகளில் விதவை மணம்‘ குறித்துப் பாரதி பேசவில்லை என்றொரு குற்றச்சாட்டும் உண்டு. இது உண்மையென்றாலும், விதவை மணத்தைப் பற்றிப் பேசத் தம் கட்டுரைகளைப் பாரதி பயன்படுத்த முனைந்தார் என்பதே முழுவுண்மையாகும். ‘விதவை மணம்‘ குறித்த பாரதியின் ஆய்வுபூர்வமான கருத்தொன்றைக் காண, இனி முனைவோம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, பிரிட்டிஷ் இந்தியாவெங்கிலும் பத்து வயதுக்குட்பட்ட பால்ய விதவைகள் 54,000க்கு அதிகமாக இருந்த தாகத் தெரியவருகிறது (Karunananthan, What is History?). பாரதி வாழ்ந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இது மேலும் அதிகரித்து ஏறக்குறைய மூன்றரை இலட்சமாகி விட்டிருக்கிறது. இது தொடர்பாகக் காந்தியின் ‘நவஜீவன்’ பத்திரிகை குறிப்பொன்றைச் சான்று காட்டிப் பின்வருமாறு பாரதி பட்டியலிடுகிறார்’ (Nalli Kuppuswamy Chettiar, 1997).

**அட்டவணை 1. இந்தியப் பெண்களில் மணமானோர் எண்ணிக்கை**

| வயது | மணம் புரிந்த மாதர் | கைம்பெண்கள் |
|---|---|---|
| 0&1 | 13212 | 1014 |
| 1-&2 | 17753 | 856 |
| 2&-3 | 49787 | 1807 |
| 3-&4 | 134105 | 9273 |
| 4&-5 | 302425 | 17703 |
| 5&-10 | 2219778 | 94240 |
| 10&-15 | 10087024 | 223032 |

மேற்கண்ட பட்டியலின் அடிப்படையில், பதினைந்து வயதுக்குட்பட்ட இந்தியப் பெண்களில் மணமானோர் எண்ணிக்கை 1,29,24,084 ஆகும். இவர்களுள் விதவையானோர் எண்ணிக்கை 3,47,925 ஆகும். இந்நிலைமையைச் சுட்டிக்காட்டும் பாரதி, விதவை மறுமணம் இந்தியச் சமூகத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்ற கருத்தைப் பின்வருமாறு வலியுறுத்துகிறார்.

*“விதவைகள் எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்துக்குத் தகுந்த புருஷரை புனர்விவாகம் செய்துகொள்ளலாம். அப்படியே புருஷர்கள் எந்தப் பிராயத்திலும் தம் வயதுக்குத் தக்க மாதரை மறுமணம் செய்து கொள்ளலாம். இந்த ஏற்பாட்டை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டும். வீண் சந்தேகம், பொறாமை, குருட்டுக் காமம், பெண்களை ஆத்மாவில்லாத, ஹ்ருதயமில்லாத, ஸ்வாதீன மில்லாத அடிமைகளாக நடத்த வேண்டுமென்ற கொள்கை இவற்றைக் கொண்டே நம்மவர்களில் சில புருஷர்கள் “ஸ்திரீகளுக்குப் புனர்விவாகம் கூடாது’ என்று சட்டம் போட்டார்கள். அதனாலேதான், மனைவியில்லாத கிழவர்கள் சிறுபெண்களை மணம் புரிய நேரிடுகிறது. அதனாலேதான், ஹிந்து தேசத்து விதவைகளின் வாழ்க்கை நரக வாழ்க்கையினும்*

*கொடியதாய் எண்ணற்ற துன்பங்களுக்கு இடமாகிறது... எல்லா விதவைகளும் மறுமணம் செய்துகொள்ள இடம் கொடுப்பதே இந்தியாவில் மாதருக்குச் செய்யப்படும் அநியாயங்கள் எல்லாவற்றிலும் பெரிதான, இந்த அநியாயத்திற்குத் தகுந்த மாற்று. மற்ற பேச்செல்லாம் வீண் கதை" (மேலது, பக் 20-21.)*

என்கிறார் பாரதி. மேலும், பலவகைகளிலும் தாம் போற்றிய சுவாமி விவேகாநந்தரையும்,மகாத்மா காந்தியையும் விதவைமணம் குறித்த அவர்தம் கருத்துகள் புரட்சிகரமானவையாக இல்லை என்பதற்காகக் கடுமையாகப் பாரதி விமர்சிப்பதையும் காண்கிறோம்." (மேலது, பக் 161, 209.)

எனவே, 'விதவை மணம்' என்ற கருத்தியலில் பாரதி கொண்டிருந்த உறுதிப்பாடு ஐயத்திற்கு இடமற்றதாகும். தம் கவிதைகளில் விதவை மணத்தைப் பாரதி பேசவில்லை என்பதைக் குறையாகக் கூறுவதைக் காட்டிலும், தம் கட்டுரைகளில் 'விதவை மணம்' குறித்து விரிவாகப் பேசியதாலேயே கவிதைகளில் அதைப் பாரதி தவிர்த்தார் என்று கொள்வதே பொருத்தம் உடையதாகலாம். மேலும், 'மிளகாய்ப் பழச் சாமியார்' என்ற தம் கதையில், விதவைப் பெண்களின் வாழ்வியல் குறித்துப் பின்வருமாறு தீவிரமாகப் பாரதி பேசுவதும் கருதத்தக்கதாகும்.

'மிளகாய்ப் பழச் சாமியார்' கதையில், நெசவுத் தொழிலாளர் வணங்கும் தெய்வமாகப் பாரதி விதவைப் பெண் ஒருத்தியைக் காட்டு கிறார். ஒவ்வோர் ஆண்டும் திருக்கார்த்திகை அன்று, அடியார்கள் சேர்ந்து, இவ்விதவைப் பெண்ணின் உடலெங்கும் மிளகாய்ப் பழத்தை அரைத்துத் திருமுழுக்குச் செய்விப்பதால், இவளுக்கு மிளகாய்ப் பழச் சாமியார்' எனப் பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இம்மானுடப் பெண் தெய்வம் பற்றிப் பாரதி,

**"இந்த நெசவுத் தொழிலாளர் அத்தனை பேரும் அங்காளியம் மனுடைய அவதாரம் என்பதாக ஒரு ஸ்த்ரீயை வணங்குகிறார்கள். அந்த ஸ்த்ரீ சுமார் நாற்பத்தைந்து வயதுடையவள். சரீரத்தில் நல்ல பலமும், வீரதீர பராக்கிரமங்களும் உடையவள். இவளுடைய புருஷன் இறந்துபோய் இருபத்தைந்து வருஷங்களாயின. இவள் காவி வஸ்திரமும், சடைமுடியும்**

**தரிக்கிறாள். இவளுடைய முகம் முதிர்ந்த, பெரிய, வலிய, உறுதியான ஆண் முகம் போல இருக்கிறது. அத்துடன் பெண்ணொளி கலந்திருக்கிறது. இவளுடைய கண்கள் பெரிய மான் விழிகளைப் போல இருக்கின்றன. இவள் ஒரு சுப்பிரமணிய சுவாமி கோயில் கட்டிக் கொண்டிருக்கிறாள்"**

என்று காட்சிப்படுத்துகிறார் (Bharathiar, 2002). இங்குப் பாரதி விதவைப் பெண் ஒருத்தியைத் தெய்வமாகக் காட்டுவது புதுமையானதாகும். மேலும் அவள், சுப்பிரமணிய சுவாமி கோயில் கட்டி வருவதாகக் கூறுவதன் மூலம், ஆணுக்குரியதாகக் கருதப்படும் கோயில் திருப்பணியைப் பெண்ணுக்கும் உரியதாக்கிப் பாரதி புரட்சி செய்துள்ளதாகவும் துணியலாம்.

இக்கதையில் வரும் கதை சொல்லிக்குப் பெண் விடுதலை தொடர்பாகப் பின்வருமாறு மிளகாய்ப் பழப் பெண் சாமியார் அறிவுரைகள் கூறுவதாகப் பாரதி குறிப்பிடுகிறார்.

***"உலகம் முழுமைக்கும் நான் சொல்லுகிறேன். ஆண் பெண்ணுக்கு நடத்தும் அநியாயம் சொல்லுக்கு அடங்காது. அதை ஏட்டில் எழுதியவர் இல்லை. அதை மன்றிலே பேசியவர் யாருமில்லை. பறையனுக்குப் பார்ப்பானும், கறுப்பு மனுஷனுக்கு வெள்ளை மனுஷனும் நியாயம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். பெண்ணுக்கு ஆண் நியாயம் செய்வது அதையெல்லாம்விட முக்கியமென்று நான் சொல்லுகிறேன். எவனும் தனது சொந்த ஸ்த்ரீயை அலஷ்யம் பண்ணுகிறான். தெருவிலே வண்டி தள்ளி நாலணா கொண்டு வருவது மேல்தொழில் என்றும், அந்த நாலணாவைக் கொண்டு நாலு வயிற்றை நிரப்பி வீடு காப்பது தாழ்ந்த தொழில் என்றும் நினைக்கிறான். பெண்கள் உண்மையாக உழைத்து ஜீவிக்கிறார்கள். ஆண் மக்கள் பிழைப்புக்காகச் செய்யும் தொழில்களில் பெரும்பாலும் பொய், சூது, களவு, ஏமாற்று, வெளி மயக்கு, வீண் சத்தம், படாடோபம், துரோகம், கொலை, யுத்தம்! இந்தத் தொழில்கள் உயர்வென்றும், சோற்றுக்குத் துணி தோய்த்துக் கோயில் செய்து கும்பிட்டு வீடு பெருக்கிக் குழந்தைகளைக் காப்பாற்றும் தொழில் தாழ்வென்றும் ஆண் மக்கள் நினைக்கிறார்கள். வியபிசாரிக்குத் தண்டனை இகலோக நரகம். ஆண் மக்கள் வியபிசாரம் பண்ணுவதற்குச் சரியான தண்டனையைக் காணோம். பர ஸ்த்ரீகளை இச்சிக்கும் புருஷர்களின்***

***தொகைக்கு எல்லையில்லை என்று நான் சற்றே மறைவிடமாகச் சொல்லுகிறேன். ஆனால் அவர்கள் பத்தினிகளை நேரே அவர்கள் நோக்க யோக்கியதை இல்லாமல் இருக்கிறார்கள். பூமண்டலத்தின் துக்கம் ஆரம்பமாகிறது. ஆணும் பெண்ணும் சமானம். பெண் சக்தி. பெண்ணுக்கு ஆண் தலை குனிய வேண்டும். பெண்ணை ஆண் அடித்து நசுக்கக் கூடாது. இந்த நியாயத்தை உலகத்தில் நிறுத்துவதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும்" (மேலது, பக். 387-389.)***

என்று, விதவைச் சாமியார் அறிவுறுத்துவதாகப் பாரதி குறிப்பிடுகிறார். இங்குப் பெண்ணுக்கு ஆண் தலைகுனிய வேண்டும் என்ற கருத்தை விதவைச் சாமியாரின் கூற்றாகப் பாரதி காட்டுவது கருதத்தக்கதாகும். எனவே, விதவை என்பதற்காகப் பெண்ணைச் சமூக வாழ்விலிருந்து ஒதுக்கி வைக்கும் கருத்தியலைப் பாரதி ஏற்கவில்லை எனலாம்.

பன்மைத்துவ ஆளுமை படைத்த பாரதி, பெண் விடுதலை குறித்த தம் கருத்துகளைக் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் எனத் தம் படைப்பு முழுவதிலும் பதிவு செய்தார். நாட்டுப்பாடல்கள், தெய்வப்பாடல்கள், முப்பெரும்பாடல்கள், பல்வகைப்பாடல்கள் எனத் தம் கவிதைகள் அனைத்திலும் பெண் விடுதலைக்காகப் பாரதி குரல் கொடுத்தார். எனினும், தம் பெண் விடுதலைக் கருத்துகளின் பிழிவாக அவர் எழுதியவையாகப் பெண் விடுதலைப் பாடல்கள்' எனும் தலைப்பின் கீழமைந்த ஆறு பாடல்களைக் கொள்ளலாம்.

# பீடு ஓங்கும் பெண்மை

பெண்ணை இரண்டாம் பாலினமாகக் கருதும் பார்வை, இந்தியத் தமிழிலக்கிய மரபில், நீண்ட நெடுங்காலமாக இருந்துவருகிறது. இதற்குப் பெண் கல்வி மறுப்பு, குழந்தை மணம், இற்செறிப்பு வாழ்க்கை, சொத்துரிமையற்ற நிலைமை எனப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம். சுருங்கக் கூறுமிடத்துப் பெண் வாழ்வுக்கான இயல்பான உரிமைகளையும் ஒடுக்க நினைக்கும் ஆணாதிக்கச் சமூகமே பெண்ணடிமைத்தனத்துக்குக் காரணம் என்பது வெளிப்படையாகும். இதைப் பாரதி தெளிந்து கொண்டமையாலேயே, தம் பெண் விடுதலைப் பாடல்களில், பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகளைப் பெண்ணெழுச்சிக்குப் பயன்படும் மாற்றுப் புனைவுகளாகப் புனைந்தார் எனலாம். இது குறித்து,

**“இந்திய இலக்கியமே கொஞ்சம் வேதாந்தப்பற்று அதிகமுள்ளதாகையால், ஆத்மஞான வாழ்வுக்கு இடையூறு எனக் கருதிவரும் பெண்மையை இகழ்ந்து பேசுவது கவிகளுக்கு ஒரு பெருமையாகக்கூட எண்ணப்பட்டது. ஆனால், அப்பேர்ப்பட்ட தப்பெண்ணம் மறைந்து, உயர்வாழ்விலும் உண்மைப்பெண்ணுக்கு ஒரு ஸ்தானமுண்டு, என்ற மனப்பான்மை தோன்றியிருக்கிறது. வேதநாயகம் பிள்ளைக்குப் பிறகு சுப்பிரமணிய பாரதி பெண்மையைச் சக்தியின் அம்சமாகப் போற்றிப் பாடியிருக்கும் பாடல்கள் தமிழ் இலக்கியத்திற்கே புதியன”**

என்பார் கு.ப.ராஜகோபாலன் (Rajagopalan, K.P., Sundararajan,

P.K., 2003). இத்தகையதோர் புதுமையைத் தாம் செய்வது குறித்த ‘விழிப்பு’ பாரதிக்கு இருந்ததைப் பின்வரும் அடி களால் அறிகிறோம்.

**“பெண்மை அறிவு உயரப் பீடுஓங்கும் பெண்மைதான்**

**ஒண்மையுற ஓங்கும் உலகு” (ப.354)**

என்று, பெண்மை உயர்ந்தால் உலகும் உயருமெனப் பாரதி குறட்பா வடிவில் பாடியுள்ளார். இப்பாடல், பெண்களுக்காகப் பாரதி நடத்தி வந்த ‘சக்ரவர்த்தினி’ பத்திரிகையின் ஒவ்வொரு இதழிலும், இலட்சிய முழக்கம் போல் ‘சக்ரவர்த்தினி’ என்ற தலைப்பின்கீழ் இடம் பெற்ற ஈரடிக் குறட்பா எனக் கூறப்படுகிறது (Bharathiar, 2002). இக்குறட்பாவில், ‘மனைவிழைவார் மாண்பயன் எய்தார்’ எனச் சான்றோரால் பழிக்கப்பட்ட பெண்ணைப் பாரதி இந்த உலகத்தின் உயர்வுக்குப் பொறுப்பாக்குகிறார்.

# நங்கை கூறும் வியப்புக்கள்

பெண்ணுக்குப் படிப்பை மறுத்துக் குடும்ப வெளிக்குள் பெண்ணை ஒடுக்கும் மூடத்தனத்தைப் பாரதி ஏற்கவில்லை. காலம் காலமாகப் பெண்ணுக்குக் கற்பிக்கப்பட்டு வரும் பண்பாட்டு விலங்குகளை மறுதலித்துப் பெண்ணும் ஆணும் சரிநிகர் சமானமெனக் கொள்ளும் புதிய நெறியைப் படைத்துத் தமது கற்பனையில் விளைந்த புதுமைப்பெண்ணுக்குப் பாரதி அணிவிக்கிறார். 'புதுமைப்பெண்' என்ற தலைப்பில் பாரதி பாடியுள்ள பாடல், பாரதி கனவு கண்ட புதிய தலைமுறைக்குரிய புதுமைப்பெண்ணின் வாழ்வியலைப் பேசுவதாகும். இப்பாடலில் பேசப்படும் புதுமைப்பெண் குறித்து,

**"மரபு வழியில் வந்த தமிழ்ப்பெண், சமூகத்தில் அடிமையாக வாழக் காணும் பாரதியார், தம்முடைய கற்பனையில் புதுமைப்பெண்ணை வகுத்துக் கொள்கிறார். பெண்ணைத் தெய்வம் எனக் கொண்டு பெண்மைக்குப் பாரதியாரளவு ஏற்றம் வழங்கும் தமிழ்ப் புலவர் வேறெவருமிலர்"**

என்பார் ஆ.வேலுப்பிள்ளை (Velupillai, A., 2004). இக்கூற்றுக்கேற்பப் 'பெண்மைத் தெய்வம்' எனப் புதுமைப் பெண்ணைப் பாரதி போற்றிடக் காண்கி றோம்.

**"போற்றி! போற்றி! ஓர் ஆயிரம் போற்றி!**

**நின் பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றி காண்!**

சேற்றிலே புதிதாக முளைத்ததோர்

செய்ய தாமரைத் தேமலர் போல் ஒளி

தோற்றி நின்றனை! பாரத நாட்டிலே

துன்பம் நீக்கும் சுதந்திரப் பேரிகை

சாற்றி வந்தனை ! மாதரசே!

எங்கள் சாதி செய்த தவப்பயன் வாழி நீ!

மாதர்க்கு உண்டு சுதந்திரம் என்றுநின்

வண்மலர்த் திருவாயின் மொழிந்த சொல்

நாதம்தான் அது நாரதன் வீணையோ?

நம்பிரான் கண்ணன் வேய்ங்குழல் இன்பமோ?

வேதம் பொன்னுருக் கன்னிகை ஆகியே

மேன்மை செய்து எமைக் காத்திடச் சொல்வதோ?

சாதல் மூத்தல் கெடுக்கும் அமிழ்தமோ?

தையல் வாழ்க பல்லாண்டு பல்லாண்டு இங்கே!

அறிவு கொண்ட மனித உயிர்களை

அடிமையாக்க முயல்பவர் பித்தராம்

நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்

நேர்மை கொண்டு உயர்தேவர்கள் ஆதற்கே

சிறிய தொண்டுகள் தீர்த்து அடிமைச்சுருள்

தீயில் இட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்

நறிய பொன்மலர் மென்சிறு வாயினால் -

**நங்கை கூறும் வியப்புக்கள் கேட்டிரோ'**

**(புதுமைப்பெண், பக்.354-355)**

புதுமைப்பெண்ணுக்குப் பல்லாயிரம் போற்றிகள் கூறும் பாரதி, மூடநம்பிக்கைகள் நிறைந்த இந்தியத் தமிழ்ச் சூழலைச் சேறாக்கி அதில் முளைத்த செந்தாமரையாகப் புதுமைப் பெண்ணைக் குறிப்பிடுகிறார் (Putumaip peṇ 1968). 'சேற்றிலே புதிதாக முளைத்த செய்ய தாமரையாகப் புதுமைப்பெண்ணைப் பாரதி குறிப்பதைப் பெண்ணடிமைத்தனம் நிலவும் இந்தியத் தமிழ்ச் சூழல் பற்றிய கடும் விமர்சனமாகக் கொள்ளலாம். அடிமை இந்தியாவின் துன்பங்களை நீக்கும் சுதந்திரப் பேரிகையாகப் புதுமைப்பெண்ணைப் பார்ப்பதால், பாரதசாதி செய்த தவப்பயனாகப் போற்றிப் புதுமைப்பெண்ணைப் பாரதி வரவேற்கிறார். இங்குப் பாரத நாட்டு விடுதலையுடன் பெண்விடுதலையையும் இணைத்துப் பாரதி பாடுவது குறித்து,

"பெண்மையின் வீழ்ச்சியில் சமூகத்தின் வீழ்ச்சியைக் காணும் பாரதி, இந்திய நாட்டின் எழுச்சிக்குப் பெண்ணெழுச்சியை இன்றியமையாத முன்தேவையாக வலியுறுத்தினார்'' (Chellappan K., 1984). என்பர். எனவே, பாரதநாட்டு விடுதலையில் பாரதப்பெண்ணுக்குப் பெரும் பங்குண்டு என்பதே பாரதியின் கருத்தெனலாம்.

பெண்களுக்குச் சுதந்திரம் உண்டு என்று புதுமைப்பெண் மொழிந்த சொல்லை நாரதன் வீணை நாதமாகவும், கண்ணன் வேய்ங்குழல் இசையாகவும், பெண்ணுருவம் பெற்று வந்த வேதப் பொருளாகவும், சாவும் மூப்பும் கெடுக்கும் அமிழ்தமாகவும் பாரதி காண்கிறார். புதுமைப்பெண்ணின் பேச்சைக் கண்ணன், நாரதன் ஆகிய ஆண்களின் இசைத்திறனுடன் பாரதி ஒப்பிடுவதிலிருந்து, பெண்ணையும் ஆணையும் சரிநிகர் சமானமாகக் கருதும் அவரது நோக்கைத் தெளியலாம். இது பற்றி,

**"கற்பையும் வாழ்க்கையையும் காதலையும் பேணி வளர்ப்பதற்கே**

**பெண் விடுதலையும், ஆண் பெண் சமத்துவமும் அவசியம் எனக் கருதுகிறான் *பாரதி*”** (Raghunathan, 1964)

என்பார் கூற்றும் ஏற்கத்தக்கதாகும். மேலும், அறிவுள்ள பெண்களை அடிமையாக்க முயலும் ஆண்களைப் பித்தர்கள் என்று பழிப்பதும், அடிமைச்சுருள்களைத் தீயில் போட்டுப் பொசுக்கத் தூண்டுவதும், பாரதி போற்றும் புதுமைப்பெண்ணின் உரிமைக் குரல்களாகப் பாட்டில் ஒலிக்கின்றன. எனினும், செந்தாமரை போன்று ஒளிர்பவளாகவும், பொன்னுருக் கன்னிகையாகவும், நறிய பொன்மலர் மென்சிறு வாய் நங்கையாகவும் புதுமைப்பெண்ணைப் பாரதி வர்ணிப்பதில் வெளிப்படும் மரபு சார்ந்த விவரிப்புமுறை கருதத்தக்கதாகும்.

# நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்

பாரதியின் வாழ்விலும் சிந்தனையிலும் திருப்பு முனையான மாற்றத்தை ஏற்படுத்தியது சகோதரி நிவேதிதையின் சந்திப்பாகும். இதே கால கட்டத்தில் சக்தி வழிபாட்டிலும் பாரதிக்குப் பற்றுதல் பிறந்தது. இதன் காரணமாக,

**'ஆரம்ப காலங்களிலே மிஸ்டர் சி.சுப்பிரமணிய பாரதியாக - ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதியாகத் தம்மைப் புலப்படுத்திக்கொண்ட மகாகவி பின்னாளில் காளிதாசனாகவும், சக்திதாசனாகவும் அறிமுகப்படுத்திக் கொள்கிறார்"** என்பர்.

இவ்வாறு பெண்தெய்வ வழிபாட்டாளராகத் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் பாரதி, பின்வரும் பாடலில் 'இங்குப் பெண்ணுரு போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்' எனப் பாடுவதும் கருதத்தக்கதாகும்.

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**

**அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்**

**பூணும் நல்லறத்தோடு இங்குப் பெண்ணுரு**

**போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்**

**நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்**

**ஞானம் நல்லறம் வீரம் சுதந்திரம்**

**பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம்**

**பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டிரோ?**

**நிலத்தின் தன்மை பயிர்க்குளது ஆகுமாம்**

**நீசத் தொண்டு மடமையும் கொண்டதாய்**

**தலத்தில் மாண்புஉயர் மக்களைப் பெற்றிடல்**

**சாலவே அரிது ஆவதோர் செய்தியாம்**

**குலத்து மாதர்க்குக் கற்பு இயல்பு ஆகுமாம்**

**கொடுமை செய்தும் அறிவை அழித்தும் அந்**

**நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்**

**நங்கை கூறும் நவீனங்கள் கேட்டிரோ!**

**புதுமைப்பெண் இவள் சொற்களும் செய்கையும்**

**பொய்மை கொண்ட கலிக்குப் புதிதுஇன்றிச்**

**சதுர்மறைப்படி மாந்தர் இருந்த நாள்**

**தன்னிலே பொதுவான வழக்கமாம்**

**மதுரத் தேமொழி மங்கையர் உண்மைதேர்**

**மாதவப் பெரியோருடன் ஒப்புற்றே**

**முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசிய**

**முறைமை மாறிடக் கேடு விளைந்ததாம்"**

**(புதுமைப்பெண், பக்.355-356 )**

இந்த உலக வாழ்வு செழிப்பதற்குப் பெண்ணையும் ஆணையும் நிகரெனக் கொள்ள வேண்டும் என்கிறார் பாரதி (Putumaip peṇ, 1968).

அடுத்துப் புதுமைப்பெண் பேசும் புரட்சிகரமான கருத்துகளை உலகோர் ஏற்றுக்கொள்வதற்காகப் புதுமைப்பெண்ணின் உருவேற்று நிற்பது தாய் சிவசக்தி என்றும் பாடுகிறார். அதாவது, தெய்வத்தின் சொற்களாகப் புதுமைப் பெண்ணின் பேச்சை உருவகப்படுத்தி விடுகிறார். அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்ற பெயரால் காலம் காலமாகப் பெண்களுக்குக் கற்பிக்கப்பட்டு வந்த அடிமைக்குணங்களை நாய்களுக்கு உரியவை என எள்ளி நகையாடும் புதுமைப்பெண், ஞானம் நல்லறம் வீரம் சுதந்திரம் ஆகியவற்றைத் தற்காலப் பெண்ணுக்குரிய புதிய குணங்களாகப் பரிந்துரைக்கிறாள். இங்குப் பாரதி, 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' எனச் சீற்றத்துடன் முழங்குவதை,

**"பாரதியாரின் சமூக சீர்த்திருத்தக் கொள்கையில் பெருமளவு பெண் விடுதலைக் கொள்கைகளாகும். மற்ற சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிடும்பொழுது ஓரளவு தணிந்தும், முறையிட்டும், வேண்டியும் நிற்கும் பாரதியார் பெண் விடுதலை இயக்கத்தில் மின்னலென, இடி முழக்கமென, புயல் காற்றாக விளங்குகின்றார்"** என்பார் கூற்றுடன் ஒப்பிட்டு நோக்கலாம் (Mani, P.S., 2002).

இவ்வாறு மின்னல், இடி, புயற்காற்றாகப் பெண் விடுதலையைப் பாரதி முழங்குவதற்குச் சரிநிகர் சமானத் தத்துவத்தில் அவருக்குள்ள ஆழ்ந்த பிடிப்பே காரணமாகலாம்.

கற்பு, குடும்பம், குழந்தை வளர்ப்பு ஆகியவற்றில் மரபான பார்வையுடன் பெரிதாக முரண்படாமல், ஆனால் தற்கால நோக்குடன் பாரதி விளக்கமளிப்பதாகக் கருதலாம். குடும்பத்தைப் புதுமைப்பெண் மறுப்பதாகப் பாரதி பாடவில்லை. குடும்பப் பெண்ணுக்குக் கற்பு இயல்பு என்றும், கற்பைப் பேண வேண்டிய கடமை பெண்ணுக்குரியது என்றும்தான் பாரதி பாடுகிறார். ஆனால், கொடுமை செய்தும் அறிவை அழித்தும் பெண்ணின் கற்பைப் பேணுவதைப் பாரதி எதிர்க்கிறார். இது குறித்து,

**"பாரதியின் புதுமைப்பெண் என்ற பாத்திரத்தில் பழைமையும் புதுமை**

**யும் ஒன்றாக இணைவதைக் காண்கின்றோம். சீர்திருத்த வேட்கையினை வெளிப்படுத்தி நிற்பதில் அவள் புரட்சிப்பெண்ணாகக் காட்சி தருகின்றாள். எனினும், அவள் வற்புறுத்துகின்ற சீர்திருத்தங்கள், பழைய மரபுச் செல்வங்களை அறுத்தெறிந்துவிட்டு முழுக்க முழுக்கப் புதுமையை வற்புறுத்துவதாக அமையவில்லை. மாறாக, மரபுச்செல்வம் என்ற மண்ணில் காலூன்றி நின்றே புதுமைச் சிந்தனைகள் என்ற கொடியினை அவள் படர விடுகின்றாள்"** (John Samuel G., 2000).

எனப் பழைமைக்கும் புதுமைக்கும் 'பாலம்' அமைப்பவளாகப் பாரதியின் புதுமைப் பெண்ணைக் கருதுவர். இப்புதுமைப்பெண் கூறும் சரிநிகர் சமானத் தத்துவத்தைப் புத்தம் புதிதாகப் பாரதி காட்டவில்லை. பழங்காலத்தில் பெண்ணும் ஆணும் ஒருவருக் கொருவர் நிகரென இருந்த நிலைமை, பிற்காலத்தில்தான் மாறு பட்டுப் பெண் ஆணுக்கு அடிமைப்படும்படி ஆயிற்று என்பதுதான் பாரதியின் கருத்தாகும். இக்கருத்தால், வரலாற்றின் முன்னொரு காலத்தில் பெண்ணும் ஆணும் சமத்துவத்துடன் வாழ்ந்தமையைப் பாரதி அங்கீகரிப்பதாகக் கூறலாம். இத்தகைய அங்கீகரிப்பு என்பது, பெண்ணியக்கருத்தியலுக்கு வளம் சேர்ப்பது என்பதால் வரவேற்கத்தக்கதாகும்.

## வீரப் பெண்கள்

கல்வியறிவு மறுக்கப்பட்டவளாகவும், வீட்டுக்கு வெளியிலான சமூக வாழ்விலிருந்து பெரிதும் துண்டிக்கப்பட்டவளாகவும், ஆணைச் சார்ந்தும் அவன் அனுமதி வேண்டியுமே வாழ்பவளாகவும் குறுக்கப்பட்ட இந்தியத் தமிழ்ப் பெண்ணின் விடுதலையே பாரதியின் கனவாக இருந்தது. இது குறித்து,

**“உலக நிலையில் பெண்ணுரிமை பற்றிப் பாரதி சிந்தித்தாலும், தம்மைச் சூழவிருந்த பாரதப் பெண்களின், சிறப்பாகத் தமிழ்ப் பெண்களின், விடுதலைக்கென்றே அவர் இதயம் துடித்தது. அவ்விதயத்துடிப்பில் கவிதை பிறந்தது. சமுதாயத்தின் நிலையான இன்ப வாழ்க்கைக்குப் பெண் விடுதலை இன்றியமையாதது எனப் பாரதி உணர்ந்தார்”** என விளக்குவர் (Arunachalam, 1966).

இவ்வாறு சமுதாயத்தின் நிலையான இன்ப வாழ்க்கைக்குப் பெண் விடுதலையை இன்றியமையாததாகப் பாரதி கண்டமையாலேயே, பெண்ணை ஆண் ஒடுக்குவதைக் கடுமையாக அவர் எதிர்த்தார்.

மேலும், பெண்ணின் விடுதலையில் தான் ஆணின் விடுதலையும் அடங்கியுள்ளது எனத் தெளிந்து கொண்டமையால், யார்க்கும் அஞ்சாத நன்னெறிகள் உடைய திமிர்ந்த ஞானச்செருக்குப் பெற்ற செம்மை மாதரைப் படைக்கவும் பாரதி முனைந்தார். இச்செம்மை மாதர் அல்லது புதுமைப்பெண் என்பவள், பாரதியின் தனித்துவமான படைப்பாவாள். இது பற்றி,

**“சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கொள்கைகளிலும் பெரிதும் ஈடுபாடு கொண்ட பாரதி அந்தக் கோட்பாடுகளைப் பெண்களுக்கும் உரியனவாகக் கருதினார். எனவேதான், அவர் வாழ்ந்த காலத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும்அநீதிகளையும் பெண்ணடிமைத்தனத்தையும் கண்டு மனம் புழுங்கினார். அவற்றைக் கண்டிக்கவும் தவறவில்லை .... புரட்சிப் புலவனான பாரதி உருவாக்கிக் காட்டும் ‘புதுமைப்பெண்’, இந்திய மண்ணில் அதற்குமுன் வேறு எவரும் உருவாக்கிக் காட்டாத உன்னதப் படைப்பாகும்”** எனத் தீர்ப்புரைப்பர் (Saravanan, P., 2007).

இத்தகைய உன்னதமான படைப்பாகப் பாரதியால் படைக்கப் பட்டுள்ள புதுமைப்பெண்ணின் இயல்புகளைப் பின்வரும் பாடல் அடிகளால் தெளியலாம்.

**“நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**

**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**

**திமிர்ந்த ஞானச்செருக்கும் இருப்பதால்**

**செம்மை மாதர் திறம்புவது இல்லையாம்**

**அமிழ்ந்து பேர் இருளாம் அறியாமையில்**

**அவலம் எய்திக் கலையின்றி வாழ்வதை**

**உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறம் ஆகுமாம்**

**உதய கன்னி உரைப்பது கேட்டிரோ!**

**உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்**

**ஓது பற்பல நூல்வகை கற்கவும்**

**இலகு சீருடை நாற்திசை நாடுகள்**

**யாவும் சென்று புதுமை கொணர்ந்து இங்கே**

திலத வாள்நுதலார் நங்கள் பாரத
　　　தேசம் ஓங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டில்ஓர் பொந்தில் வளர்வதை
　　　வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்
சாத்திரங்கள் பல பல கற்பராம்
　　　சவுரியங்கள் பல பல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்
　　　மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை அனைத்தையும்
　　　கடவுளர்க்கு இனிதாகச் சமைப்பராம்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்
　　　இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ!
போற்றி போற்றி ஜயஜய போற்றி! இப்
　　　புதுமைப் பெண்ணொளி வாழி பல்லாண்டு இங்கே!
மாற்றி வையம் புதுமையுறச் செய்து
　　　மனிதர் தம்மை அமரர்கள் ஆக்கவே
ஆற்றல் கொண்ட பராசக்தி அன்னை நல்
　　　அருளினால் ஒரு கன்னிகை ஆகியே
தேற்றி உண்மைகள் கூறிட வந்திட்டாள் செல்வம்
　　　யாவினும் மேல் செல்வம் எய்தினோம்”

(புதுமைப்பெண், பக்.356-357)

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச்செருக்கு ஆகியவற்றைப் புதுமைப்பெண்ணின் இலக்கணங்களாகப் பாரதி வரையறுக்கிறார் (Putumaip peṇ, 1968). ஆணை நேர்கொண்டு பார்க்காத தன்மையே பெண்ணின் கற்புத் திண்மையாகப் போற்றப்பட்ட தமிழ்ச் சூழலில், தலை நிமிர்வையும் திமிர்ந்த ஞானச் செருக்கையும் பெண்மையின் அடையாளங்களாகப் பாரதி வலியுறுத்துவது மிகவும் முற்போக்கானதாகும். இப்பெண்மை அடையாளங்களுள் பெண்ணுக்குத் ‘திமிர்ந்த ஞானச்செருக்கு வேண்டும் எனப் பாரதி பாடுவது கருதத்தக்கதாகும். ஏனெனில், பெண் விடுதலைக்கு முன் நிபந்தனையாகப் பாரதி வலியுறுத்தியது பெண் கல்வியைத்தான். இது குறித்து,

“இந்த விஷயம் (பெண் விடுதலை) நிறைவேற வேண்டுமானால், அதற்கு மூன்றுவிதமான உபாயங்களிருக்கின்றன. முதலாவது உபாயம் கல்வி. இரண்டாவது உபாயம் கல்வி. மூன்றாவது உபாயமும் கல்வியே. அதாவது கல்வியைத் தவிர வேறெல்லா விதமான உபாயமும் சிறிதேனும் பயன்படாதென்பது கருத்து” (Nalli Kuppuswamy Chettiar, 1999).

எனப் பாரதி விளக்குவது அறியத்தக்கதாகும். வீட்டுக்கு வெளியில் இருக்கும் உலக வாழ்க்கையின் நுட்பங்களை ஆராய்ந்து நுகர்வதும், பற்பல நூல்களைப் படித்துப் பொது அறிவை வளர்த்துக் கொள்வதும், நாடுகள் யாவும் சென்று சுற்றி அனுபவம் சேகரித்து வருவதும், விலகி வீட்டில் ஒரு பொந்தில் வளர்வதை ஒழித்துப் பாரததேசம் ஓங்க உழைத்திடுவதும், வீரப் பெண்களாகிய புதுமை மங்கைகளுக்குப் பாரதி பரிந்துரைக்கும் பெண்ணியக் கருத்துகளாகும். இது குறித்து,

**“பெண் விடுதலை பற்றிய பாரதியின் சங்கநாதத்தைக் கேட்கும் நாம், அதை வெறும் சங்கொலியாக மட்டும் கொள்ள முடியவில்லை. சென்றதை நினைத்து, நிகழ்காலத்திய நடப்பை உணர்ந்து, எதிர்காலத்திய வேலைத் திட்டமாகக் கொள்ள வேண்டியிருக்கிறோம்”**

என்பார் கருத்து, முற்றிலும் பொருந்துவதாகும். சாத்திர நூல்களைப் பெண்கள் கற்கக் கூடாது என்ற பழைய விதியை எதிர்த்துச் சாத்திரங்களைக் கற்கப் பெண்களைப் பாரதி தூண்டுகிறார் (Viswanathan, Seeni., 1962). இவ்வாறு பெண் கல்வியின் தேவையைப் பாரதி வலியுறுத்துவதற்கு,

**“அறிவின் வலிமையே வலிமை. அறிவினால் உயர்ந்தோர்களை மற்றோர் இழிவாக நினைப்பதும், அடிமைகளாக நடத்துவதும் ஸாத்யப்படமாட்டா”**

என்று அவர் கருதியதே காரணமாகும் (Nalli Kuppuswamy Chettiar, 1999). மேலும் ஆடை அணிதல், வாகனம் ஓட்டுதல், வேலைக்குப் போதல், நட்புப் பேணுதல் போன்ற செயல்பாடுகளில், விருப்பம் போல் பெண்கள் அவர்களுக்கு ஏற்ற சவுரியங்கள் பலவற்றைச் செய்து கொள்வதையும் பாரதி வரவேற்கிறார். காலத்தால் பழைமைப்பட்டுப் போன, ஆனால் தற்காலத்துக்குச் சிறிதும் பொருந்தாத மூத்த பொய்மைகளான பொருளற்ற பழைய சடங்குகளையும், மூடத்தனமான கட்டுப்பாடுகளையும் புதுமைப்பெண்கள் தகர்ப்பதற்கும் ஆதரவளிக்கிறார்.

எனினும், மானிடர் செய்கை அனைத்தையும் கடவுளருக்கு இனிதாகச் சமைக்குமாறும், ஆண்மக்கள் ஏத்திப் போற்றிடும் வகையில் வாழுமாறும் புதுமைப்பெண்களுக்குப் பாரதி அறிவு றுத்துவதில், பாரதியின் ஆண் நோக்கையே காண்கிறோம். உடன் கட்டை ஏறுவதையும், பெண் சிசுக் கொலையையும், வெள்ளைச் சீலை உடுத்திய விதவை வாழ்வையும், குழந்தை மணத்தையும், பெண்ணின் மீது ஆணுலகம் திணித்துள்ளது. இவற்றுக்குக் கடவுள் இசைவும் இந்து சமயத்தில் பெறப்பட்டுள்ளது. எனவே பாவப் பிறவியாகவும், வீடுபேற்றுக்குத் தடையாகவும் கற்பிக்கப்பட்ட இந்துப் பெண்ணின் செய்கைகளைக் கடவுளர்க்கு இனிதாகச் சமைக்கு மாறு பாரதி அறிவுறுத்துவது நியாயமற்றதாகும். ஒரு வேளை பாரதி, ஆண் கடவுள்களை மறுதலித்துப் பெண் தெய்வங்களையே இங்குக் குறிப்பிடுவதாகத் துணியலாம்.

அவ்வாறு கொண்டால், பெண்ணிய நோக்குக்கு அது வலிமை சேர்ப்பதாகலாம். இவ்வாறு செவ்வியப்புனை வாகப் பாதுகாப்புக்குரியவளாகச் சீர்திருத்தப் படிமமாகக் கடவுளருக்கு இனிதானோராகப் பன்முகப் பரிமாணங் களில் வெளிப்படும் பாரதியின் புதுமைப்பெண் என்ற கருத்தியல் குறித்து,

**“பாரதி எழுத்துக்களில் பெண், ‘புதுமைப்பெண்’ எனும் மாற்று எதிர்ப்புக் கருத்தியலாக, சக்தி வடிவு எனும் ஆன்மீகப் புனைவாக - கற்பிதமாக - கவிக்குக் கவிதை நல்கும் காதலியாக, பெண்மை, புரிதற்கியலாத செவ்வியப் புனைவாக, பாரதி என்ற ஆணின் எழுத்துகளில், ‘வலுவற்ற மெல்லியளாக, ஆணின் பாதுகாப்பிற்குரியவளாக அவனது துணையாக, பாரதி என்ற பெண்ணியவாதியின், நேர்முகப் பெண் படிமமாகச் (Positive Image) சீர்திருத்தவாதியின் திருத்தங்களுக்குச் செயல்வடிவம் தருபவளாகப் பன்முகப் பரிமாணங்களில் வெளிப்படுகிறாள்”** என விளக்குவர் (Arasu, V., 2001).

இந்த வையத்தைப் புதுமையுறச் செய்து, மனிதர்கள் தம்மை அமரர்கள் ஆக்கிடவே, புதுமைப்பெண்ணின் வடிவில் அன்னை பராசக்தி தோன்றிப் பெண்ணும் ஆணும் சரிநிகர் சமானமாய் வாழ்வதற்குரிய உண்மைகளை அறிவித்ததாகப் பாரதி பாடுகிறார். மேலும், செல்வம் யாவினும் பெரிய செல்வமாகப் புதுமைப்பெண்ணின் பேச்சுகளையே பாரதி கொள்கிறார். எனவே, ஆணாதிக்கச் சமூகத்தை எதிர்க்கும் நோக்கில் பாரதியால் படைக்கப்பட்டதே ‘புதுமைப்பெண்’ என்ற படிமம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை எனலாம்.

# மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்

மனையாளை அஞ்சும் மறுமையிலாளனாகப் பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையைக் கடிந்து பேசும் தமிழ் மரபில், ‘மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்’ எனப் பெண்ணைக் கொண்டாடிப் பாரதி பேசுவது எதிர்ப்புனைவாகும். இத்தகைய எதிர்ப்புனைவைப் பெண்ணியக் கருத்தியல் சார்ந்த தெளிவான புரிதலுடனேயே பாரதி செய்தார் என்பதை,

**“பூமண்டலம் முழுதிலும், பெண்ணைத் தாழ்வாகவும், ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் ஆதாரம்; பாவங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்; அநீதிகளுக்கெல்லாம் கோட்டை; கலியுகத்துக்குப் பிறப்பிடம்”** (Subrahmanya Bharati, C., 2008).

எனப் பெண்ணடிமைத்தனத்தைச் சமூக அநீதியாகக் கண்டு பாரதி சீறுவதன்வழி அறிகிறோம். பின்வரும் பாடலில், ‘பெண்மை வாழ்க’ என்றும், ‘பெண்மை வெல்க என்றும் பாரதி பாடுவதில், அவரது ஆணாதிக்க மறுப்பும் பெண்விடுதலைச் சார்பும் ஐயந்திரிபற வெளிப்படக் காண்கிறோம். ‘பெண்மை’ என்ற தலைப்பில் பாரதி பாடியுள்ள பின்வரும் பாடல், பெண்மையின் பெருமைகளைப் போற்றி ஆண்கள் பாடுவதாய் அமைக்கப் பட்டுள்ளது. இப்பாடலில், மனைவியின் பெருமையைப் பாரதி கொண்டாடியுள்ளார்.

“பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா

பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா

தண்மை இன்பம் நற்புண்ணியம் சார்ந்தன

தாயின் பேரும் சதி என்ற நாமமும்

அன்பு வாழ்க என்று அமைதியில் ஆடுவோம்

ஆசைக்காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்

துன்பம் தீர்வது பெண்மையினாலடா

சூரப் பிள்ளைகள் தாய் என்று போற்றுவோம்

வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா

மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்

கலி அழிப்பது பெண்கள் அறமடா,

கைகள் கோத்துக் களித்து நின்று ஆடுவோம்

பெண்அறத்தினை ஆண்மக்கள் வீரம்தான்

பேணுமாயின் பிறகு ஒரு தாழ்வு இல்லை

கண்ணைக் காக்கும் இரண்டு இமை போலவே

காதல் இன்பத்தைக் காத்திடுவோமடா

சக்தி என்ற மதுவை உண்போமடா

தாளம் கொட்டித் திசைகள் அதிரவே

ஒத்து இயல்வதோர் பாட்டும் குழல்களும்

ஊர்வியக்கக் களித்து நின்று ஆடுவோம்

உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்

**உயிரினுக்கு உயிராய் இன்பம் ஆகிடும்**

**உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா**

**ஊது கொம்புகள்! ஆடு களி கொண்டே!**

**போற்றி தாய் என்று தோள் கொட்டி ஆடுவீர்**

**புகழ்ச்சி கூறுவீர் காதல் கிளிகட்கே**

**நூற்று இரண்டு மலைகளைச் சாடுவோம்**

**நுண்ணிடைப் பெண் ஒருத்தி பணியிலே**

**போற்றி தாய் என்று தாளங்கள் கொட்டடா!**

**போற்றி தாய் என்று பொற்குழல் ஊதடா!**

**காற்றில் ஏறி அவ்விண்ணையும் சாடுவோம்**

**காதல் பெண்கள் கடைக்கண் பணியிலே**

**அன்னம் ஊட்டிய தெய்வ மணிக்கையின்**

**ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்**

**கன்னத்தே முத்தம் கொண்டு களிப்பினும்**

**கையைத் தள்ளும் பொற்கைகளைப் பாடுவோம்"**

(பெண்மை, பக்.357-358 )

இப்பாடலில், பெண்மையைப் போற்றி ஆண் பாடுவதாகப் பாரதி புனைந்துள்ளார். பெண்மை வெல்க என்றும், காதலை வாழ்த்துவோம் என்றும், துன்பம் தீர்வது பெண்மையினால் என்றும், வலிமை சேர்ப்பவள் தாய் என்றும், மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள் என்றும், கலி அழிப்பது பெண்கள் அறம் என்றும் ஆண் பாடுவதாகப் பாரதி எழுதுவதில், அவரது பெண் சார்புப் பார்வையைச் சிறப்பாகக் காண்கிறோம். இது குறித்து,

**"பாரதி பெண்களைப் பற்றிப் பாடினார் என்றால், பேசினார் என்றால், ஏதோ அவர்கள் வாயில்லாப் பூச்சிகள், அபலைகள், கேட்பாரற்றுக் கிடப்பவர்கள், அவர்களுக்குப் பரிவு காண்பிக்க வேண்டும் என்ற உணர்வுடன் இல்லை. பெண் சமுதாயத்தின் சக்தியை, வலிமையை, தனித்தன்மையை உணர்ந்தவர் பாரதி"** (Saravanan, P., 2007).

என விளக்குவர். மேற்கண்ட பாடலில், உயிரைக் காட்டிலும் இனியதாய்ப் பெண்மையைப் பாரதி போற்றுவதும், தாய்மைக்கும் காதலுக்கும் சம முதன்மையளித்துப் பாடுவதும், அன்பின் வடிவமாய் ஆற்றலின் அடையாளமாய்ப் பெண்மையைக் கொண்டாடுவதும் கருதத்தக்கதாகும்.

உலகியலில் பெண் பெறும் வெற்றிகளைப் பரந்த மனத்துடன் ஏற்றுக் கொண்டாடும் பண்பு, இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலும், ஆண்களிடம் இயல்பானதாகப் படியவில்லை. மிகவும் குறைவான ஆண்களே, தம்முடன் வாழும் பெண்களைச் சமமதிப்புள்ள உயிர்களாகக் கருதும் பண்பைக் கைக்கொண்டுள்ளனர். இக்காலத்திலேயே நிலைமை இவ்வாறு உள்ளதெனில், பாரதி வாழ்ந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலச் சூழலைப் பற்றி மேலும் விவரிக்க வேண்டியதில்லை. இது குறித்து,

**"ஆண் மக்களுக்கு ஸமானமான கல்வித் திறமை பெண்களுக்குப் பொதுப்படையாக ஏற்படும்வரை, ஆண் மக்கள் பெண்மக்களைத் தக்கபடி மதிக்க மாட்டார்கள். தாழ்வாகவே நடத்துவார்கள். தமிழ்நாட்டு ஸஹோதரிகளே! கணவன்மார், உடன்பிறந்தார், புத்திரர் முதலியவர்களால் நன்கு மதிக்கப்பெறாமல் இழிவாகக் கருதப்பட்டு உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறந்துவிடுதல் நன்று"** (Nalli Kuppuswamy Chettiar, (1999).

எனப் பாரதி கருத்துரைப்பது எண்ணத்தக்கதாகும். இவ்வாறு ஆணாதிக்கம் கோலோச்சிய சூழலிலும் பாரதி, மேலே காட்டப்பட்ட பாடலில், 'பெண்மை வாழ்க - பெண்மை வெல்க' என்றெல்லாம் பாடியுள்ளதிலிருந்து, தம் காலச் சூழலையும் மீறிப் பெண்ணுக்கு நியாயம் செய்யப் பாரதி

முனைந்துள்ளதாகக் கொள்ளலாம்.

பெண்ணை ஆண் போற்றுவதாகப் பாரதி பாடியுள்ளதில், புதிய சமுதாயத்துக்குப் பெண் தலைமையேற்கும் ஆற்றல் படைத்தவள் என்ற கருத்து குறிப்புணர்த்தப் பட்டுள்ளதாகவும் கொள்ளலாம். இருப்பினும், இப்புதுமைப் பெண்களையும் காக்க வேண்டிய பொறுப்பாளிகளாகப் பாரதி ஆண்மக்களையே குறிப்பிடுகிறார். 'பெண்ணறத்தினை ஆண் மக்கள் வீரம்தான் பேணுமாயின் பிறகொரு தாழ்வில்லை' என்று பாரதி பாடுவதில், பெண் காக்கப்பட வேண்டிய பொருளாகவும் ஆண் காக்கும் வீரனாகவும் காட்டப்படுவது அறியத்தக்கதாகும். இங்குப் பெண்ணறம் என்பதற்குக் கற்பென்று பொருள் கொண்டால், பெண்ணின் கற்பைக் காக்கும் வீரம் பொருந்தியவனே ஆண் என்று பாரதி கருதுவதாகப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கும். இவ்வாறு புரிந்து கொள்ளும்போது, வரையறுக்கப்பட்ட பெண் விடுதலையையே பாரதியும் அவாவுவதாகத் துணியலாம். இது குறித்து,

**"பாரதியின் பெண்கள் புதுமைப்பெண்கள், ஆனால் புரட்சிப் பெண்கள் அல்ல. ஏனெனில், பெண் விடுதலையைப் பொறுத்தவரை பாரதியார் போக்கு மிதவாதப் போக்காகும். பெண்ணுக்குக் கல்வி, தொழில், அரசியல் என்ற உரிமைகள் உண்டு என்று கூறும் அவர், பெண் விடுதலையை, முன்னேற்றம், சுதந்திரம், உரிமை என்கிற மூன்று பரிமாணங்களில் நிலைப்படுத்தியுள்ளார். பெண் திருமணம் இன்றி வாழ இயலும். அவள் விரும்பினால், அவளை அப்படியே விட்டுவிடலாம் என்று ஓரிடத்தில் மட்டும் கூறும் பாரதியார், பெண்ணுக்குத் திருமணமே உகந்தது என்பதைப் பல இடங்களில் பேசியுள்ளார்"**

என விளக்குவர் (Arasu, V., 2001).

இங்குப் பெண்ணை ஆண் காக்க வேண்டும் என்ற பார்வையும், பெண்ணுக்குக் கற்பும் ஆணுக்கு வீரமும் அடையாளங்கள் என்பதும், ஆணாதிக்கச் சமூகம் வகுத்தளித்த இலக்கணங்களாகும். இந்த இலக்கணங்களைப் பாரதியும் மொழியவே செய்கிறார் என்பது, பெண்ணிய

நோக்கில் உவப்புடையதாகத் தோன்றவில்லை.

# பெண் விடுதலைக் கும்மி

பெண்ணுரிமைக் கருத்துகளைப் பொதுமக்களிடம் பரப்புவதற்குப் பாரதி இசைப் பாடல் வடிவிலமைந்த கவிதைகளைப் பெரிதும் பயன்படுத்தியதாகக் கருதுகின்றனர். இவற்றுள் பாரதி பாடிய 'பெண்கள் விடுதலைக் கும்மி' மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.இவ்வகைக் கும்மிப் பாடலைப் பாரதி பாடியதைப் போற்றி,

**"நம் நாட்டுப் பெண்பாலரெல்லாம் விரும்பி மனப்பாடம் பண்ணிக் கொள்வதற்கு ஏற்றபடி, கும்மி முதலான கீதங்களை அமைத்து வெளியிடுதல் மிக்க பலனளிக்க கூடியது. பெண்பாலரிடம் அத்தகைய பாடல்கள் பரவுதல் எளிதாயிருப்பதோடு, அதனால் உண்டாகும் நன்மைகளும் அனந்தமாம்"** (Sivathambi, Ka., Marx, A., (1984).

என மு.இராகவையங்கார் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலைத் தம் மனைவி பெயரில் பாரதி எழுதி வெளியிட்டதும் புரட்சிகரமானதாகும் (Eraiyaasan, P., 1995). இப்பாடலில், புதிய சமுதாயத்தின் புதிய பொருளாகப் பெண் விடுதலையைப் பாரதி காண்கிறார். வையத் தலைமை கொள்வதற்குத் தகுதி படைத்தவளாகப் புதுமைப் பெண்ணைப் பாரதி புனைகிறார். ஆனால், குடும்பப் பொறுப்பிலிருந்து பெண்ணை விலக்கிக் குழந்தை வளர்ப்பிலிருந்து துண்டித்துத் தன்னிச்சையாய் விடுதலைக் காதலை விரும்பி வாழ்பவளாகப் புதுமைப் பெண்ணைப் படைக்கப் பாரதி துணியவில்லை. பெண்ணுக்கும் ஆணுக்குமான கூட்டுச் சமூகப் பொறுப்பை வலியுறுத்தும் பொதுமைப்

பார்வையே பாரதியிடம் காணப்படுகிறது.

**“பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்**

**பேசிக் களிப்பொடு நாம் பாடக்**

**கண்களிலே ஒளி போல உயிரில்**

**கலந்து ஒளிர் தெய்வம் நற்காப்பாமே**

**கும்மியடி தமிழ்நாடு முழுதும்**

**குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி**

**நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின**

**நன்மை கண்டோம் என்று கும்மியடி (கும்மியடி)**

**ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று**

**எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்**

**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற**

**விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் (கும்மியடி)**

**மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில்**

**மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே**

**வீட்டில் எம்மிடம் காட்ட வந்தார் அதை**

**வெட்டி விட்டோம் என்று கும்மியடி (கும்மியடி)**

**நல்லவிலை கொண்டு நாயை விற்பார் அந்த**

**நாயிடம் யோசனை கேட்பது உண்டோ ?**

**கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை**

**கூட்டி வைத்தார் பழி கூட்டிவிட்டார் (கும்மியடி)**

**கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு**

**கக்ஷிக்கும் அஃது பொதுவில் வைப்போம்**

**வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்**

**வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம் (கும்மியடி)**

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**

**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**

**எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்**

**இளைப்பில்லை காண் என்று கும்மியடி! (கும்மியடி)**

**வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்**

**வேண்டி வந்தோம் என்று கும்மியடி**

**சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்**

**சாதி படைக்கவும் செய்திடுவோம் (கும்மியடி)**

**காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன்**

**காரியம் யாவிலும் கை கொடுத்து**

**மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்**

**மாட்சி பெறச் செய்து வாழ்வமடி (கும்மியடி)"**

(பெண்கள் விடுதலைக்கும்மி, பக்.359 -360)

இங்குப் பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சியைப் பாடுவதற்குத் தெய்வத்தின் காப்பைப் பாரதி வேண்டுகிறார். பழமையைப் புறந்தள்ளாத புதுமைப்பார்வையே பாரதியிடம் உள்ளதற்குச் சான்றாகத் தெய்வக்காப்பைப் பெண் விடுதலைக்குத் துணையாக அவர் வேண்டுவதன்வழி அறியலாம். மேலும், பெண்கள் விளையாட்டாகத் தமிழ்நாட்டில் நிலைபெற்றுள்ள

கும்மிப்பாட்டு வடிவத்தைப் பயன்படுத்திப் பெண் விடுதலை பற்றிப் பாரதி பாடியுள்ளதும் போற்றத்தக்கதாகும். இது பற்றி,

**“பாரதியின் ‘பெண் விடுதலைக் கும்மி’யைப் பொறுத்த மட்டில், அதைப் பாட அறியாத சிறுமி, தமிழகத்தின் எந்தப் பட்டி தொட்டியிலும், எந்த மூலை முடுக்கிலும் இல்லை என்ற நிலைமை ஏற்படவேண்டும்”** (Jivanandam, P., 2002) எனப் ப.ஜீவானந்தம் கூறுவது ஏற்கத்தக்கதாகும். ஏனெனில், ஏட்டைப் பெண்கள் தொடக்கூடாது, வீட்டுக்குள்ளேயே முடங்கி வாழ்பவள் தான் கற்பரசி, திருமணத்துக்குப் பெண்ணின் விருப்பம் தேவையில்லை, ஆணுக்குக் கற்பு வேண்டாம், ஆணுக்குப் பெண் அடி பணிய வேண்டும், சமைப்பதும் வீடு காப்பதும் குழந்தை பெறுவதும் வளர்ப்பதுமே பெண்ணுக்குரியவை, ஆணைச் சார்ந்து வாழவே விதிக்கப்பட்டவள் பெண் என்பவை போன்ற ஆணாதிக்கக் கருத்தியல்களைப் பெண்கள் விடுதலை கும்மியில் நையப் புடைத்து விடுகிறார் பாரதி. இது தொடர்பாக,

**“ஸ்த்ரீகள் புருஷரிடம் அன்பாக இருக்க வேண்டினால், புருஷர் ஸ்த்ரீகளிடம் அசையாத பக்தி செலுத்தவேண்டும். பக்தியே பக்தியை விளைவிக்கும். நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப்பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும், குருவாயினும், புருஷனாயினும் மூடனைத் தவிர வேறில்லை. அவனுடைய நோக்கம் நிறைவேறாது. அச்சத்தினால் மனுஷ்யஆத்மா வெளிக்கு அடிமை போல நடித்தாலும் உள்ளே துரோகத்தை வைத்துக் கொண்டுதான் இருக்கும். அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது”** (Nalli Kuppuswamy Chettiar, 1999).

என்கிறார் பாரதி. மேற்கண்ட கும்மிப் பாடலில், தம்மைப் பிடித்த பிசாசுகள் போய்த் தொலைந்தமையால் நன்மை கண்டு விட்டதாகப் புதுமைப்பெண்கள் கும்மியடிப்பதாகப் பாரதி காட்டுகிறார். இங்குக் கற்பு என்னும் நெறியைப் பெண்ணுடன் ஆணுக்கும் வலியுறுத்திப்

பொதுஒழுக்கமாகப் பாரதி பாடுவது புரட்சிகரமானதாகும். பெண்ணுக்கு மட்டும் 'கற்புக் கற்பு என்று உலகோர் கதைக்கும் பொய்மையைக் கடுமையாகப் பாரதி விமர்சிக்கிறார். ஆனால், பெண்ணுக்கு மட்டுமல்லாமல் ஆணுக்கும் கற்பு வேண்டும் என்பதில், பாரதி தெளிவாய் இருக்கிறார்.

**"ஒருவன் ஒருத்தியினிடத்திலும், ஒருத்தி ஒருவனிடத்திலும் மனத்தாலும் வாக்காலும் செய்கையாலும் கற்புநெறி தவறாமல் நித்தியப் பற்றுடையோராய் மனஒருமை எய்தித் தம்முள் ஆதரவுற்றுத் துய்க்கும் இன்பமே இன்பமெனத்தகும்"** (மேலது, ப.43.)

என்பதுதான், கற்பைப் பற்றிய பாரதியின் பார்வையாகும். பெண்ணுக்கும் கற்பு வேண்டாம் ஆணுக்கும் கற்பு வேண்டாம் என்ற விடுதலைக் காதல் கொள்கையில் பாரதிக்கு உடன்பாடில்லை. பெண்ணுக்கும் ஆணுக்கும் கற்பை வலியுறுத்தாத சமுதாயத்தில் குடும்பம் நிலைபெற முடியாது என்பதாலும், மிகப்பெரிய சிக்கலாகக் குழந்தை வளர்ப்பு உருவெடுத்து விடும் என்பதாலும், அறிவுபூர்வமான அணுகுமுறையின் அடிப்படையிலேயே விடுதலைக் காதல் கொள்கையைப் பாரதி மறுதலிப்பதாகக் கொள்ளலாம்.

சூழல் காரணமாகப் பேணும் காதலை வேண்டிக் கற்பிழந்த பெண்ணைப் பழமைவாதிகள் போன்று தெய்வக்குற்றம் செய்தவளா கவும், சமூகத்தால் தண்டித்து ஒதுக்கப்பட வேண்டியவளாகவும், மன்னிப்புக்குத் தகுதியற்ற பெரும்பாவியாகவும், இழித்தும் பழித்தும் ஏசப்பட வேண்டியவளாகவும் பாரதி கருதவில்லை. மனிதநேயத்துடன் அணுகிப் புரிந்துகொள்ளப்பட வேண்டியவளாகவே கருதுகிறார். இது குறித்து,

**"பதிவிரதை இல்லை என்பதற்காக, ஒரு ஸ்த்ரீயை வதைத்து ஹிம்சை பண்ணி அடித்து ஜாதியை விட்டுத் தள்ளி ஊரார் இழிவாக நடத்தி அவளுடன் யாவரும் பேசாமல் கொள்ளாமல் தாழ்வுபடுத்தி அவளைத் தெருவிலே சாகும்படி விடுதல் அநியாயத்திலும் அநியாயம். அட பரம மூடர்களா, ஆண் பிள்ளைகள் தவறினால் ஸ்த்ரீகள் எப்படி பதிவிரதைகளாக இருக்க முடியும்?"**

(மேலது,ப.108.)

எனப் பாரதி கேட்பது, இங்குச் சிந்திக்கத்தக்கதாகும். எனவே, வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம் என்று சீறி எதிர்ப்புக்குரல் எழுப்பும்போது, மனம் பொருந்தாத மண வாழ்வால் விளையும் தீமைகள் பற்றிய புரிதலுடனேயே பாரதி பேசுவதாகத் துணியலாம். மேலும், பெண்ணும் ஆணும் 'சரிநிகர் சமானம்' என்பதை விளக்க முனையும்போது,

**"ஸ்த்ரீகளுக்கு ஜீவன் உண்டு; மனம் உண்டு; புத்தியுண்டு; ஐந்து புலன்கள் உண்டு; அவர்கள் செத்த யந்திரங்களல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர். சாதாரணமாக ஆண்மாதிரியாக வேதான். புறவுறுப்புக்களில் மாறுதல்; ஆத்மா ஒரே மாதிரி. இதனை மறந்து அவர்களைச் செக்குமாடுகளாகப் பாவிப்போர் ஒரு திறத்தார். பஞ்சுத் தலையணைகளாகக் கருதுவோர் மற்றொரு திறத்தார். இரண்டும் பிழை. ஸ்த்ரீகள் தமக்கிஷ்டமான பேரை விவாகம் செய்து கொள்ளலாம். விவாகம் செய்துகொண்ட புருஷனுக்கு ஸ்த்ரீ அடிமையில்லை; உயிர்த்துணை; வாழ்க்கைக்கு ஊன்றுகோல்; ஜீவனிலே ஒரு பகுதி; சிவனும் பார்வதியும் போலே; விஷ்ணுவும் லக்ஷ்மியும் போலே. விஷ்ணுவும் சிவனும் பரஸ்பரம் உதைத்துக் கொண்டதாகக் கதை சொல்லும் பொய்ப் புராணங்களிலே விஷ்ணு லக்ஷ்மியை அடித்தாரென்றாவது, சிவன் பார்வதியை விலங்கு போட்டு வைத்திருந்தாரென்றாவது, கதைகள் கிடையா. சிவன் ஸ்த்ரீயை உடம்பிலே பாதியாகத் தரித்துக்கொண்டார். விஷ்ணு மார்பின் மேலே இருத்தினார். பிரம்மா நாக்குக்குள்ளேயே மனைவியைத் தாங்கி நின்றார். ஜகத்திற்கு ஆதாரமாகிய பெருங்கடவுள் ஆண் -பெண் என இரண்டு கலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூர்ணமான சமானம்; பெண்ணை அணுவளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும்"** (மேலது, பக். 47-&48.)

எனப் பாரதி கருத்துரைப்பதும் ஆராயத்தக்கதாகும். ஆனால் பெண் தாழ்த்தப்பட்டதற்கு முதன்மையான காரணங்களுள் ஒன்று, குடும்பம் - சமூகம்

ஆகியவற்றின் வாழ்வியல் விதிகளைக் காலம் காலமாகத் தொடர்ந்து ஆண்களே உருவாக்கி வந்தமையாகும். இது பற்றிய தெளிவு பாரதிக்கு இருந்தது. 'பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதைவிட வேறு நன்மை ஒரு தேசத்திற்கு ஏற்படாது' என்று உறுதியாக அவர் நம்பினார். (சீனி. விசுவநாதன் (பதி.), கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள் (நான்காம் தொகுதி), ப.708.) இந்நம்பிக்கையால்தான், பட்டங்கள் ஆள்வதுடன் சட்டங்கள் செய்யும் பொறுப்பையும் பெண்கள் கைக்கொள்வதாகப் பாரதி பாடுகிறார். மேலும், புதிய வேதங்கள் படைக்கவும், புதிய நீதிகள் செய்யவும் புதுமைப்பெண்கள் முனைவதாகப் பாடுவதும் கருதத்தக்கதாகும். இது தொடர்பாக,

**"பாரதியின் புதுமைப்பெண்கள் உருவாவதற்குத் துணை நின்றது அரசியல் அல்ல; பொருளாதாரமல்ல; மரபு அல்ல; மதமுமல்ல. அவர்களை உருவாக்கியது கல்வி"** எனப் புதுமைப்பெண்ணை உருவாக்கிய பெண் கல்வியின் பெருமையை வா.செ. குழந்தைசாமி போற்றக் காண்கிறோம் (Kulanthaisamy, V.C., 1988).

சமூகத்தின் பொதுநலனைக் கட்டிக் காக்கும் குடும்ப அமைப்பைப் பேணும் நோக்கில், பெண் பற்றிய பழைமையான பார்வையையும், தமது புதுமையான பார்வையையும் இணைத்துத் திமிர்ந்த ஞானச் செருக்குள்ள ஆனால் மாதர் அறங்களைக் கைவிட்டு விடாத புதுமைப்பெண்ணைப் பாரதி படைத்துள்ளதாகத் தோன்றுகிறது. இப்புதுமைப் பெண்ணுக்குச் சமைப்பதும், குழந்தை பெறுவதும், பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், அறிவினில் ஆணோடு போட்டியிட்டு வெல்வதுமான அனைத்துமே இயலும் என்கிறார் பாரதி. இவளுக்கு எதுவும் விலக்கன்று. எல்லாமே இவளுக்கு உரிமையுடையவைதாம். இத்தகைய கருத்தியலைப் பாரதியிடம் காண முடிந்தாலும், காதல் ஒருவனைக் கைப்பிடித்த பின் அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து அவள் வாழ்வதுதான், புதுமைப்பெண்ணுக்குப் பாரதி விதிக்கும் நடைமுறை வாழ்வாகும். 'அவள் காரியம்' என்றும் ஒன்று இருக்கக்கூடும்

என்பதைப் பாரதி கருதிப் பார்க்கவேயில்லை. எனினும்,

**“பெண்களுக்கு விடுதலையுண்டானால் ஒழிய விவாக சம்மந்தமான ஆயிரத்தெட்டு ஊழல்கள் நீங்க வழியில்லை”**

என்ற கருத்தையும் பாரதி கொண்டிருந்தார் (Nalli Kuppuswamy Chettiar, 1999). எனவே, கல்வியறிவு கிட்டாத, சொத்துரிமைபெறாத, உலக அனுபவமில்லாத விடுதலையற்ற பெண்களால் மணவாழ்வில் சம உரிமையுடன் வாழ இயலாது என்பதுதான் பாரதியின் நடைமுறை வாழ்வியல் பார்வையெனலாம். இந்நடைமுறைப் பார்வை காரணமாகத்தான், மேற்காட்டப்பட்ட பெண்கள் விடுதலைக்கும்மிப் பாடலில், புதிய விழிப்புப் பெற்ற பெண்ணின் மனக்குரலை அதன் அனைத்து ஆழ அகலங்களுடனும் வெளிப்படுத்தப் பாரதி முனைந்துள்ளதாகக் கொள்ளலாம். இது பற்றி,

**“புதுமைப்பெண்ணின் செயல்களையும், சொற்களையும் விளக்கிப் பேசி அவளைப் பாராட்டும் மூன்றாம் நிலையில் அமைந்த ஒரு மனிதனாக (Narrator (Or) Spokesman), இப்படைப்பில் கவிஞன் செயல்படுகின்றான்”** (John Samuel G., 2000) என்பர். இவ்வாறு மூன்றாம் மனிதனாகக் கவிஞன் நின்று, புதுமைப்பெண்ணின் மனக் குரலைப் பதிவு செய்வது பற்றிப் பா. வெங்கடேசன் கூறும் பின்வரும் கருத்துகள், பாரதியின் பெண்ணியப் பார்வையைப் புரிந்துகொள்வதற்குச் சிறப்பாகப் பயன்படுவனவாகும்.

**“இந்தப் பாடலின் (பெண்கள் விடுதலைக் கும்மி) இறுதியில் பயின்று வரும் ‘கும்மியடி’ எனும் சொற்பிரயோகம், பாடல்தளத்தில் ஒரு சூழலை உருவாக்குகிறது. கும்மி என்பது முதலாவதாகப் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு கலை வடிவம். இரண்டாவதாக இந்தக் கலையை நிகழ்த்தப் பல பெண்ணுடல்கள் ஒரேயிடத்தில் ஒன்றாகச் சேர வேண்டியிருக்கிறது. மூன்றாவதாக இந்த வடிவம் பொதுவாகத் திருவிழா போன்ற பொது நிகழ்வுகளின்போது நடத்தப்படுவது. ஆக, பாடல் நிகழுமிடம் ஒரு திருவிழா**

**பரப்பு. பேசிக் கொண்டிருப்பவரும் தனியான நபரல்ல. பலர் என்பது நமக்குக் குறிப்பால் சுட்டப்படுகிறது.**

**கும்மியாட்டத்தின் இன்னொரு முக்கியமான அம்சம், இந்நிகழ்வின்போது, பெண்ணுடலின் அசைவுகள் குனிவதும், நிமிர்வதும், வளைவதும், கைகளைத் தட்டியும் வாயாலும் உரத்த ஒலி எழுப்புவதும், கூடிச் சிரிப்பதும் இவற்றையெல்லாம் பலர் பார்க்க நிகழ்த்துவதுமான இவ்வசைவுகள், பெண்ணுக்கு அவளது குடும்பச் சூழலில் கடுமையாக மறுக்கப்படும் ஒன்று. அது போலவே பாடலின் மேல் தளத்தில் வெளிப்படும் கவிதை சொல்லியின் விருப்பங்களும், அவருக்குக் காலகாலமாய் மறுக்கப்பட்டு வருவதே.**

**ஆக, ஒரு திருவிழாச் சூழலைத் தன் விருப்பத்தைச் சொல்லுவதற் காகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதன் மூலம், திருவிழா மற்றும் பண்டிகைக் காலங்களில் மட்டுமே அனுமதிக்கப்படும் சில அத்து மீறல்களையும் மரபுப்பிறழ்வுகளையும் கவிதை சொல்லி, ஒடுக்கி வைக்கப்பட்ட சுய விருப்பங்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்து வதற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார் என்பதை நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது.**

**ஒரே நேரத்தில், பாடலைப் பாடுபவரின் (அல்லது பாடுபவர்களின்) கனவையும், அவரது (அல்லது அவர்களது) யதார்த்தத்தையும் பாடல் சூசகமாக வாசிப்புக்குட்படுத்துகிறது. கும்மியடி என்கிற ஒற்றைச் சொல் உருவாக்கும் சூழலினால், பெண்ணுடலின் யுகாந் திரத் தனிமையைப் பாடல் வாசகப் பிரக்ஞை அதிரும் வண்ணம் சொல்வதன் மூலம், தன் 'மொழியை' அடையாளம் காட்டி விடுகிறது"**

எனப் பெண் விடுதலை முழக்கத்துடன், துயரம் தோய்ந்த பெண் மனத்தின் அரட்டலையும் பெண் விடுதலைக் கும்மிப் பாடலில் கேட்க முடிவதாகக் கூறிப் பெண்ணாகவே மாறிவிட்ட ஆணாக அதாவது பெண் குரலில் பேசுபவராகப் பாரதியைப் பா.வெங்கடேசன் கொண்டாடுகிறார்.

இங்குப் பெண்ணுக்கு எதிராகக் கட்டப்பட்ட சொல்லாடல்களைக் கொண்டே, பெண்ணுக்கு ஆதரவாகப் பாரதி பேசுவது அறியத்தக்கதாகும்.

# பெண் விடுதலைக் கருத்தியல்

'பெண் விடுதலை' எனத் தலைப்பிட்டுத் தனிப்பாடல் ஒன்றைப் பாரதி படைத்துள்ளார். விடுதலைக்கு மகளிர் கொண்ட வேட்கையைப் பறையறிவித்து முழக்கும் இப்பாடல் எழுதப்பட்ட பின்னணி குறித்து,

**'சியூசீன் என்ற சீனத்து ஸ்திரியின் கதை' என்ற கட்டுரையில், இப்பாடல் இடம் பெற்றுள்ளது. சியூசீன் என்ற சீனப் பெண்மணியை, பெண்கள் விடுதலைக்குப் போராடிய வீராங்கனையை அறிமுகப்படுத்தும் கட்டுரையை, புதுச்சேரியில் ஒரு கூட்டத்தில் பாரதியின் குமாரியாகிய ஸ்ரீ தங்கம்மா படிக்க, அதே கூட்டத்தில் பாரதியின் இரண்டாவது மகள் ஸ்ரீ சகுந்தலா பாடிய பாடல் இது"**

என விளக்குவர். பெண் விடுதலைக் கருத்தியலைத் தம் சொந்த வாழ்விலும் பாரதி செயல்படுத்த முனைந்ததற்குச் சான்றாகத் திகழும் இப்பாடலில், தம் மகள்கள் இருவரையும் சமூக மனுஷிகளாகப் பாரதி மடைமாற்ற முனைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இப்பாடலில், தேச விடுதலை உள்ளிட்ட பொதுவாழ்வின் பல்வேறு செயல்பாடுகளிலிருந்தும் பெண்ணை விலக்கி வைக்கும் மரபான சிந்தனைப் போக்குக்கு மாறாகப் பயிற்சியின் வழியாகப் பெண்ணைப் பாரதி அனைத்து அகப்புறச் செயல்பாடுகளுடனும், எல்லா அறிவுத்துறைகளுடனும் இணைக்க முனைந்துள்ளதைக் காண்கிறோம்.

“விடுதலைக்கு மகளிர் எல்லோரும்

வேட்கை கொண்டனம் வெல்லுவோம் என்றே

திடமனத்தின் மதுக்கிண்ணம்மீது

சேர்ந்து நாம் பிரதிக்கினை செய்வோம்

உடையவள் சக்தி ஆண்பெண் இரண்டும்

ஒருநிகர் செய்து உரிமை சமைத்தாள்

இடையிலே பட்ட கீழ்நிலை கண்டீர்

இதற்கு நாம் ஒருப்பட்டிருப்போமோ?

திறமையால் இங்கு மேல்நிலை சேர்வோம்

தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்

குறைவிலாது முழுநிகர் நம்மைக்

கொள்வர் ஆண்கள் எனில் அவரோடும்

சிறுமை தீர நம் தாய்த் திருநாட்டைத்

திரும்ப வெல்வதில் சேர்ந்து இங்கு உழைப்போம்

அறவு இழந்தது பண்டை வழக்கம்

ஆணுக்குப் பெண் விலங்கு எனும் அஃதே

விடியும் நல்ஒளி காணுதி நின்றே

மேவும் நாகரீகம் புதிது ஒன்றே

கோடியர் நம்மை அடிமைகள் என்றே

கொண்டு தாம் முதல் என்றனர் அன்றே

அடியோடு அந்த வழக்கத்தைக் கொன்றே

**அறிவு யாவும் பயிற்சியில் வென்றே**

**கடமை செய்வீர் நம் தேசத்து வீரக்**

**காரிகைக் கணத்தீர் துணிவுற்றே”**

**(பெண் விடுதலை, பக்.360-361 )**

என்று, விடுதலைக்கு வேட்கை கொண்ட மகளிரின் குரலைப் பாரதி பதிவு செய்துள்ளார். பெண் விடுதலையை வெல்லுவோம் என்று மதுக்கிண்ணத்தின்மீது பிரதிக்கினை செய்து பெண்கள் உறுதி ஏற்பதாகப் பாரதி பாடுவது, ஒழுக்கவியல் அணுகுமுறையை மீறிய அவரது புரட்சிகரமான பார்வையைக் காட்டுவதாகும். ‘திடமனத்தின் மதுக்கிண்ணம்’ என்ற சொற்சேர்க்கையைப் பெண்களின் பிரதிக்கினையுடன் பாரதி தொடர்புபடுத்துவதில் மதுவைக் கொண்டாடும் ஆண் குரலைக் காண்பதற்கும் இடமுண்டு என்றபோதிலும், அதைக் காட்டிலும், விடுதலையில் உறுதிப்பாடு கொண்ட பெண் மனத்தின் இன்பத்தை மதுக்கிண்ணமாகப் பாரதி உருவகிப்பதாகப் பொருள் கொள்வதே பொருத்தமுடையதாகும்.

சக்தியாகிய படைப்புத் தெய்வத்தைத் துணைக்கழைத்துப் பெண்ணையும் ஆணையும் ஒரு நிகரெனப் பாரதி அறிவிக்கிறார். பெண்ணடிமைத்தனம் என்பது இடைக்காலத்தில் ஏற்பட்ட கீழ்மை என்றும், மனித வரலாற்றின் தொடக்க காலத்தில் இந்நிலைமை இல்லை என்றும் பாரதி வலியுறுத்துகிறார். ஆணுக்குப் பெண்ணை அடிமை விலங்காக்கும் தீய பண்டைய வழக்கத்தையும், பெண்ணைப் பழிக்கும் இகழ்ச்சிகளையும் தகர்ப்பதற்குப் புதுமைப்பெண்கள் துடிப்பதாகப் பாரதி பாடுகிறார். மேலும், பெண் விடுதலையை மறுப்போர் குறித்து,

**“பெண்களுக்கு விடுதலை கொடுத்ததனால் ஜன சமூகம் குழம்பிப் போய்விடும் என்று சொல்லுவோர், பிறர் தமது கண்முன் ஸ்வேச்சையுடன் வாழ்வதைத் தாம் பார்க்கக்கூடாதென்று அசூயையால் சொல்லுகிறார்களே**

**யொழிய வேறொன்றுமில்லை"** (Nalli Kuppuswamy Chettiar, 1999)

எனத் தோலுரித்தும் காட்டியுள்ளார். ஆண்களின் பரிவால் பெண்கள் பெறும் விடுதலையைப் பாரதி அவாவவில்லை; மாறாகத் தம் திறமையால் ஆண்களுடன் போட்டியிட்டுப் பெண்கள் மேல்நிலை பெறுவதையே பாரதி அறிவுறுத்துகிறார். முழுநிகராகப் பெண்களை ஆண்கள் கொண்டால் மட்டுமே, அவர்களுடன் இணைந்து தாய்நாட்டின் விடுதலைக்காகப் பெண்கள் போராடலாம் எனப் பாரதி நிபந்தனை விதிப்பதும் காணத்தக்கதாகும். இவ்வாறு முழுநிகராகப் பெண்ணையும் ஆணையும் காணும் பாரதி,

**"ஸ்த்ரீகளை மிருகங்களாக வைத்து நாம் மாத்திரம் மஹரிஷிகளாக முயலுதல் மூடத்தனம். பெண் உயராவிட்டால் ஆண் உயராது"** (மேலது, ப.64.)

எனப் பெண் விடுதலைக்குத் தடையாகும் ஆண்களை எச்சரிக்கவும் பாரதி தவறவில்லை. மேலும், பெண்ணடிமை இருட்டு விடிந்து ஒளி பிறப்பதாகவும், பெண்ணடிமை அகன்று - அனைத்து நிலைகளிலும் பெண்ணும் ஆணும் சரிநிகர் என்ற - புதிய நாகரிகம் பரவுவதாகவும், அறிவு யாவும் பயிற்சியில் வென்றே கடமை செய்யப் புதுமைப்பெண்கள் துணிந்துவிட்டதாகவும் பாரதி பாடுகிறார். இங்குத் தீய பண்டைய இகழ்ச்சிகளைத் தேய்த்துத் திறமையால் மகளிர் மேல்நிலை சேர்வதற்கு, 'அறிவு யாவும் பயிற்சியில் வென்றே கடமை செய்வீர்' எனப் பாரதி வழிகாட்டுவது சிந்திக்கத்தக்கதாகும். இது தொடர்பாக,

"பெண்ணின் பிரச்சனைகளை எடுத்துக்கூறித் தீர்க்கதரிசனமான தீர்வுகளையும், தந்திருப்பதுதான் பாரதியின் தனிச்சிறப்பாகும்" என்பார் கருத்தும் நோக்கத்தக்கதாகும் (Saravanan, P., 2007; Chandrasekaran, Ira., 2004).

இவ்வகையில் பாரதி, இப்பெண்விடுதலைப் பாடலில், முழுமையான உரிமையைப் பெண்ணுக்கு வலியுறுத்துவதும், அத்தகைய சரிநிகர் சமானமான

உரிமையைக் கடுமையான போராட்டத்தின் வழியாகவே பெண் அடைய முடியும் என்று தீர்வைக் குறிப்புணர்த்துவதும் போற்றத்தக்கதாகும். இவ்வாறு குறிப்புணர்த்துவதுடன் மட்டும் அமையாமல், 'பெண்' விடுதலை பெறுவதற்கான முக்கியமான ஆரம்பப்படிகளாகப் பின்வருவனவற்றை யும் பாரதி காட்டுகிறார்.

1. பெண்களை ருதுவாகு முன்பு விவாகம் செய்து கொடுக்கக்கூடாது.
2. அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தல் கூடாது.
3. விவாகம் செய்துகொண்ட பிறகு அவள் புருஷனை விட்டு நீங்க இடங் கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப் படுத்தக் கூடாது.
4. பிதுரார்ஜிதத்தில் பெண் குழந்தைகளுக்கு ஸமபாகம் கொடுக்க வேண்டும்.
5. புருஷன் இறந்தபின்பு ஸ்த்ரீ மறுபடி விவாகம் செய்துகொள்வதைத் தடுக்கக்கூடாது.
6. விவாகமே இல்லாமல், தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்த்ரீகளை யதேச்சை யான தொழில் செய்து ஜீவிக்க இடங் கொடுக்கவேண்டும்.
7. பெண்கள் கணவனைத் தவிர வேறு புருஷருடன் பேசக்கூடாதென்றும் - கூடாதென்றும் பயத்தாலும் பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்து விடவேண்டும்.
8. பெண்களுக்கும் ஆண்களைப்போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்தவேண்டும்.
9. தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்யோகம் பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக்கூடாது." (Nalli Kuppuswamy Chettiar, 1999)

என, நடைமுறை வாழ்வில் பெண் விடுதலை பெறுவதற்குரிய வழிகளையும், மேற்காட்டியவாறு தம் கட்டுரையொன்றில் பாரதி பரிந்துரைத்துள்ளதும் அறியத்தக்கதாகும்.

# அக்னிக்குஞ்சு

பெண் விடுதலையைக் குறிப்புப்பொருளாக வைத்துப் பாரதி பாடியதாகக் கருதப்படுவது, 'அக்னிக்குஞ்சு' என்னும் பின்வரும் பாடலாகும். இது பற்றி,

**"பாரதியார் காளிதாஸன் என்ற புனைபெயரில் எழுதிய "விடுதலை முத்தம்மா கதை' என்ற கதையின் இறுதியில் வேணுமுதலி பாடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இக்கதையில் வருகிற இரண்டு பெண்கள் பாரதியிடம் விடுதலை முத்தம்மாவின் கதையைச் சொல்வது போலவும், அது கேட்டு ஆச்சரியம் கொண்ட பாரதி, அப்பெண்களின் தகப்பனாகிய வேணு முதலியிடம், 'என்ன முதலியாரே! குழந்தைகளுக்கு விடுதலைப் பைத்தியம் ஏறிப் போயிருக்கிறதே!' என்று கேட்க, வேணுமுதலி இப்பாடலைப் பாடுவதாகவும் கதை அமைந்துள்ளது. இதன் அடிப்படையில் இப்பாடல், 'பெண் விடுதலைப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளது".**

எனச் சந்திரகாந்தன் விளக்குகிறார். 'விடுதலைப் பைத்தியம் ஏறிப்போய் 'வேகமும் வீச்சும் கொண்டதாகத் தீவிரமான தொனிப்பொருள் பெற்றதாகப் பாரதியின் 'அக்னிக் குஞ்சு' திகழ்வதைப் பின்வரும் வரிகளால் அறிகிறோம்.

**"அக்கினிக்குஞ்சு ஒன்று கண்டேன் - அதை**

**அங்கு ஒரு காட்டில் ஓர் பொந்து இடை வைத்தேன்**

**வெந்து தணிந்தது காடு - தழல்**

**வீரத்தில் குஞ்சு என்றும் மூப்பு என்றும் உண்டோ**

**தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்”** (அக்னிக்குஞ்சு, ப.361 )

இங்குப் புதிய விழிப்புப் பெற்ற பெண் விடுதலைக் கருத்தியலைப் பாரதி அக்கினிக் குஞ்சாகவும், ஆணாதிக்கத்தைக் காடாகவும் உருவகித்துப் பாடியுள்ளதாகக் கருதலாம். இது குறித்து,

**“பெண்களின் விடுதலையுணர்வினை அக்னிக்குஞ்சு என்றும், அது வீரியம் மிக்கது என்றும், அந்நியரை விரட்டியடிக்கும் வலிமையாக அது விரிவடையும் என்றும் புதைபொருட்களை வெளிப்படுத்துமாறு அச்சொல்லாடல் அமைகிறது”** என விளக்குவர் (Chandrasekaran, Ira., 2004).

தழல் வீரமாகப் பரவும் பெண்ணுரிமைச் சிந்தனை களால் ஆணாதிக்கக் காடு வெந்து தணிவதாகப் பாரதி காட்டுகிறார். பெண்ணியம் என்பது இந்த நூற்றாண்டில் தோன்றி வளர்ந்த காலப் பழமையில்லாத ஒரு புத்தம் பதிய சிந்தனைதானே என்று உரிய மதிப்புத் தர மறுப்பவருக்குப் பதிலளிப்பதற்காகத் தழல் வீரத்தில் இளையது மூத்தது என்பதெல்லாம் இல்லை தீ தீதான் அது போல்தான் விழிப்புற்ற பெண்ணும் சரி நிகர் சமான உரிமை பெறும்வரை ‘புதுமைப்பெண் எனும் அக்கினிக்குஞ்சு’ ஓய மாட்டாள் என்று பாரதி பாடுவதாகத் துணியலாம். இந்திய விடுதலையைக் குறிப்புணர்த்தும் விடுதலைப்பாடல், பழைமையை வெறுத்துப் புதுமையை வரவேற்கும் புரட்சிப்பாடல், பொய்ம்மையை வேரறுத்து மெய்ம்மையை அவாவும் தத்துவப்பாடல் என்று பலவகையாகப் பொருள் கொள்ளவியலும் என்றபோதிலும், பெண் விடுதலையைப் பேசும் பெண்ணியப் பாடலாக அக்கினிக்குஞ்சைக் காண்பதே மிகவும் பொருத்தமுடையதாகலாம். இது பற்றி,

**“தமிழ் மரபின் முன்னுதாரணம் இக்கவிதைக்கு முற்றிலும் இல்லை என்றே கூறவேண்டும். சொற்கள் பொருளைத் துறந்துவிட்டு உணர்வை எட்டத் தாவுகின்றன.... பொருளைச் சுமந்து வரும் வாகனமாகத் தன்னைச் சுருக்கிக் கொள்ளாமல், வாசக அனுபவத்திற்கேற்ப எல்லையற்று விரிந்து செல்லும் பண்புடையது இக்கவிதை. இன்றைய சூழலில் சமகால வாசகன் ஒருவன் தன்னுடையதான வாசிப்பை நிகழ்த்திச் சமகால அனுபவத்தை**

**இக்கவிதையிலிருந்து பெற முடியும். காலத்தின் முன் சென்று எதிர்கால வாசகனையும் பாரதி இங்கு எதிர்கொள்கிறார். பாரதி நம்பிக்கை கொண்டிருந்த புதுமை, இக்கவிதையில் உயிர் பெற்று எழுகிறது"** (Balachandran, Ira., 1999)

எனச் சமகால அனுபவத்தைப் பேசுவதுடன், காலத்தின் முன் சென்று எதிர்கால வாழ்வில் பெண் தலைமை பெறப்போகும் சாத்தியத்தைக் குறிப்புணர்த்துவதாகவும் விளக்குவர். இவ்வகையில் பெண்மையைப் பாரதி அக்னிக் குஞ்சாகக் கண்டு பாடியுள்ளது, பெண்ணியப் போராட்டத்திற்குப் பயன்படும் ஆக்கப் புனைவாகப் போற்றத்தக்கதாகும்.

பீடு ஓங்கும் பெண்மையைப் பற்றிய பாரதியின் குறட்பா, புதுமைப்பெண், பெண்மை, பெண்கள் விடுதலைக்கும்மி, பெண் விடுதலை, அக்னிக்குஞ்சு ஆகிய ஆறும் பாரதியால் பாடப்பட்டுள்ள பெண் விடுதலைப் பாடல்களாகும். இப்பாடல்களில், ஆணுடன் சரிநிகர் சமானமாகப் பெண் வாழ்வதற்குரிய வழிவகைகளைப் பாரதி தெளிவுபடுத்தியுள்ளார். மேலும், காலம் காலமாகப் பெண்ணுக்குக் கற்பிக்கப்பட்டு வரும் அடிமைக் கருத்தியலை மறுதலித்துப் பெண்ணையும் ஆணையும் இணை உயிரிகளாகச் சமமான வாழ்வியல் மதிப்புப் பெற்றவர்களாகக் காட்டியுள்ளார்.

பெண்கல்வி மறுப்பு, குழந்தை மணம், இற்செறிப்பு வாழ்க்கை, சொத்துரிமையற்ற வாழ்நிலை, குடும்பச் சுமைதாங்கியாதல் போன்ற வற்றால் இரண்டாம் பாலினமாகக் குறுக்கப்பட்ட பெண்ணினம், தன் பண்பாட்டு விலங்குகளை உடைத்து வீறு கொண்டெழப் 'புதுமைப்பெண்' கவிதையைப் பாரதி படைத்துள்ளார். பாரதியின் புதுமைப்பெண், உலக வாழ்வின் நுட்பங்களைத் தேர்ந்து கொண்டு, சுயசிந்தனையும் செயல்வேகமும் சமூக அக்கறையும் புதுமை வேட்கையும் பெற்றுச் சிறப்பவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். காலம் காலமாகத் தமிழ்ப் பெண்களுக்குக் கற்பிக்கப்பட்டு வரும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய மரபான குணங்களை மறுதலித்து ஞானம், நல்லறம், வீரம், சுதந்திரம் ஆகிய புதிய குணங்களைப் புதுமைப்பெண்களுக்குப் பாரதி பரிந்துரைக்கிறார். மேலும், ஆணை நேர்கொண்டு பாராமையே பெண்ணின் கற்புத்திண்மையாகப் போற்றப்பட்ட தமிழ்ச் சூழலில், தலைநிமிர்வையும் ஞானச் செருக்கையும்

பெண்ணின் அடையாளங்களாகப் பாரதி புனைவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

'அக்னிக்குஞ்சு' கவிதையில், பெண் விடுதலைச் சிந்தனையைப் பாரதி அக்னிக் குஞ்சாகவும் ஆணாதிக்கத்தைக் காடாகவும் உருவகித்துள்ளார். 'பெண்கள் விடுதலைக் கும்மி' பாடலில் பெண் கல்வியை வலியுறுத்தல், பெண்ணின் விருப்பத்துக்கு மதிப்பளித்தல், ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாய்க் கற்பைக் காணல், கட்டாயத் திருமணத்தை மறுத்தல், பட்டங்கள் பெற்றுச் சட்டங்கள் இயற்ற வல்லவராகப் பெண்களைப் புனைதல், சரிநிகர் சமான வாழ்வை வேண்டுதல், காதலை அடிப்படையாகக் கொண்ட குடும்ப அமைப்பைப் பேணி வளர்த்தல் போன்ற பல நவீனமான கருத்துக்களைப் பாரதி பேசக் காண்கிறோம்.

இவ்வாறு பெண்ணியப் போராட்டத்திற்குப் பயன்படும் ஆக்கப் புனைவுகளாகப் பாடப்பட்டுள்ள பாரதியின் பெண்விடுதலைப் பாடல்கள், பாரதியின் பெண் கருத்தியலின் அடிப்படையாகவும் பிழிவாகவும் திகழ்வதாகத் துணியலாம்.

பெண்ணடிமைத்தனம் ஒழிவதற்குப் புதிய சட்டங்கள் செய்த ஆங்கிலேயரின் ஆட்சி உதவியது என்ற உண்மையைப் பாரதி பதிவு செய்துள்ளார். 'சதி' என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கமும், 'பால்ய விவாகம்' என்னும் குழந்தை மணக் கொடுமையும் ஆங்கிலேயர் இயற்றிய சட்டங்களால்தான் ஒழிந்தன. இவ்வரலாற்றுண்மைகளைப் பாரதி திரிக்கவில்லை. ஆங்கிலேயரைத் தம் விடுதலைநோக்குக் காரணமாகப் பல இடங்களில் பாரதி கடுமையாக விமர்சித்துள்ள போதிலும், இந்தியரின் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான அவர்தம் சட்டமுயற்சிகளைக் குறிப்பாகப் பெண்ணின மேம்பாட்டுக்கான செயல்பாடுகளைப் பாரதி எதிர்க்காமல் வரவேற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்ணைப் பற்றிப் பாரதிக்கு மிகவும் பண்பட்ட பார்வையிருந்தது. பெண்ணைப் பாரதி மதித்தார்; போற்றினார்; வழிபட்டார்; விமர்சித்தார். பெண்ணின் காதல், கற்பு ஆகியன குறித்துப் பாரதியிடம் முற்போக்கான கருத்துகள் இருந்தன. குடும்பச் சிறையில் வாழ விதிக்கப்பட்ட அடிமைகளாக,

ஆண்களின் போகப்பொருள்களாகப் பெண்களைப் பாரதி பார்க்கவில்லை. ஒழுக்கத்தின் பெயரைச் சொல்லிப் பெண்களை ஒடுக்கும் ஆண் மனம் பாரதியிடம் செயல்படவில்லை. மாறாகப் பெண்கள்பால் நின்று அவர்களது வாழ்வியல் சிக்கல்களை மதிப்பிடவே பாரதி முயன்றார். சுருங்கக்கூறின், சமூக மாற்றத்தைச் சாத்தியப்படுத்தும் ஆக்க சக்தியாகப் பெண்ணைப் பாரதி கண்டார் எனலாம்.

நிமர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச்செருக்கு ஆகியவற்றைப் புதுமைப்பெண்ணுக்குரிய வலிமைகளாகப் பாரதி புனைகிறார். அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு ஆகிய ஆணாதிக்க விதிகளுக்கு மாறாகக் கல்வி, அறம், வீரம், சுதந்திரம் ஆகிய ‘சரிநிகர் சமான’ மாற்றுகளை முன்வைக்கிறார். ஆணை நேர்கொண்டு பாராமையே பெண்ணின் கற்புத்திண்மையாகப் போற்றப்பட்ட தமிழ்ச் சூழலில், தலைநிமிர்வையும் திமிர்ந்த ஞானச்செருக்கையும் பெண்மையின் அடையாளங்களாகப் பாரதி வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

உலக வாழ்வின் நுட்பங்களை ஆராய்ந்து நுகர்வதும், பொது அறிவில் தேர்ச்சி பெறுவதும், வீட்டுப் பொந்திலிருந்து நீங்கிப் பற்பல நாடுகள் சுற்றி வருவதும், தீவிர அரசியலில் பங்கேற்பதுமான செயல்பாடுகளைத் தாம் படைத்த புதுமைப்பெண்ணுக்குப் பாரதி பரிந்துரைக்கிறார். இவ்வாறு புதுமைப்பெண்ணின் வாழ்வியலாகப் பாரதி அடையாளப் படுத்தும் கருத்தாக்கங்கள், பெண்ணிய நோக்கில் முற்போக்கானவையாகச் சுட்டத்தக்கவையாகும். காலத்தால் பழைமைப்பட்டுப் போன, ஆனால் தற்காலத்துக்குச் சிறிதும் பொருந்தாத மூத்த பொய்மைகளான பொருளற்ற பழைய சடங்குகளையும், மூடத்தனமான கட்டுப்பாடுகளையும் புதுமைப்பெண்கள் தகர்ப்பதற்குப் பாரதி ஆதரவளிக்கிறார். எனினும், குடும்பப் பொறுப்பிலிருந்து பெண்ணை விலக்கிக் குழந்தை வளர்ப்பிலிருந்து துண்டித்துத் தன்னிச்சையாய் விடுதலைக்காதலை விரும்பி வாழ்பவளாய்ப் புதுமைப் பெண்ணைப் படைக்கப் பாரதி துணியவில்லை.

பெண்ணுக்கும் ஆணுக்குமான கூட்டுச் சமூகப் பொறுப்பைச்

சமதளத்தில் வலியுறுத்தும் பாரதி, பெண் விடுதலையைப் பாடும்போது, எவ்வித ஒளிவும் மறைவும் இல்லாமல் நேர்ப்படப் பேசுகிறார். அவரது குரலில் உண்மையும் நேர்மையும் ஒளிர்கின்றன. எனவே, பொதுநிலையில் மனித உரிமைக்கும் சிறப்புநிலையில் பெண்ணுரிமைக்கும் குரல் கொடுத்த கவிஞராகப் பாரதியை மதிப்பிடலாம்.

## References


Arasu, V., (2001) Feminism and Bharathi, First Edition, Waves Publishing House, Chennai, India.

Arunachalam, (1966) Kaviarasar Bharathi, First Edition, Pandian Press, Chidambaram, India,

Balachandran, Ira., (1999) Bharathi Philosophy, Art Literature, Language, First Edition, Manonmaniam Sundaranar University Press, Tirunelveli, India.

Bharathiar, (2002) Bharathiar Stories, Fifth Edition, Poompuhar Publishing House, Chennai.

Chandrasekaran, (1996) Bharathiar Stories, Second edition.

Chandrasekaran, Ira., (2004) Mahakavi Bharathiar: Ideological Innovation, First Edition, Teachers Publication, Coimbatore, India.

Chellappan K., (1984) Bharathi-The visionary humanist, first edition, Chemmeen publishers, Chennai, India.

Eraiyaasan, P., (1995) Journalist Bharathi, First Edition, New Century Book House (P) Ltd., Chennai, India.

Ganesalingan, Che., (1997) Feminist Coast, Fourth Edition, Kumaran Publishers, Chennai

Jivanandam, P., (2002) Bharathi Darshan, (How to Study Bharathi?), First Edition, Aarooth Books, Chennai, India.

John Samuel G., (2000) A Comparative study of Shelley and Bharati, Institute of Asian Sciences, Chennai, India.

Karunananthan, What is History?, First Edition, Bharathi Book Store, Chennai.

Kulanthaisamy, V.C., (1988) Bharathi's Scientific Vision, Fifth Edition, Bharathi Publishing House, Chennai, India.

Mahakavi Bharathiar, V.R., (2004) Biography, First Edition, Varthamanan Publishing House, Chennai.

Mani, P.S., (2002) Bharathiar's Movement, Ponkodi Publishing House, Chennai, India.

Mathimaran, V., (2006) Bharathiya Janatha party, second edition, Angusam Publication, Chennai.

Nalli Kuppuswamy Chettiar, (1997) Tamil Nadu Madhar, First Edition, Sri Bhuvaneswari Publishing House, Chennai.

Nalli Kuppuswamy Chettiar, (1999) Who's is Bharathi, First Edition, Sri Bhuvaneswari Publishing House, Chennai, India.

Nuhmaan, M.A., (1985) Review articles, First edition, Annam (p) ltd., Sivagangai, India.

Putumaip peṇ, (1968) First Edition, New Century Book House (P) Ltd., Chennai.

Raghunathan, (1964) Bharathi and Shelly, First Edition, New Century Book House (P) Ltd., Chennai, India.

Rajagopalan, K.P., Sundararajan, P.K., (2003), Kannan En Kavi, Third Edition, Nivedita Publishing House, Chennai.

Raju, T.S., (1976) Bharathi A Life, First Edition, Amudham Nilayam Ltd., Chennai.

Ravikumar, B., and Pachiappan, (2002) Thambi-naan yedhu seivenada!, (Bharathiputhiran interview), First edition, Ponni publications, Chennai, India.

Saravanan, P., (2007) Bharathiar Kala Samugam, Bharathiar Conference, Edited by M. Sayapu Maraikayar, First Edition, Gangai Book Centre, Chennai, India.

Sivathambi, Ka., Marx, A., (1984) Bharathi - From the Death to Mahakavi, Second Edition, New Century Book House (P) Ltd., Chennai.

Subrahmanya Bharati, C., (2008) Kala varicaippaṭuttappatta Parati pataippukaḷ, Edited by Viswanathan, Seeni., Nineth Edition, Viswanathan Publications, Chennai, India.

Subramaniyan, K.N., (2017) Ilakiya Virasankal, Editedby Shanmuga Sundaran, S., Kavya Publication, Chennai, India.

Velupillai, A., (2004) Time and Concept in Tamil Literature, Fourth Edition, Kumaran Book House, Chennai, India.

Viswanathan, Seeni., (1962) Tamil Nadu Thantha Mahakavi, First Edition, Meghalai Publishing House, Chennai, India.

Yakan, (2004) Ve. Madhimaran's Bharatiya Janata Party, Criticism and Explanation, First Edition, Kalaka Veliedu, Chennai, India.